அரி
ஓம் நமோ
ஸ்ரீ ராம ஜெயம்

ஸ்ரீ ஆழ்வார்கள் பன்னிருவர்களும் அருளிய

# நாலாயிரத்திவ்ய பிரபந்தத் தொகுப்பு



ஆயர்பாடி ஸ்ரீ ஆழ்வார்கள் ஆச்சிரம வெளியீடு

அரி
ஓம் நமோ
ஸ்ரீராமஜெயம்

# ஸ்ரீ ஆழ்வார்கள் பன்னிருவர்களும்

# வேதசாரமாக

# அருளிய

# ஸ்ரீ மகாவிஷ்ணுவின் பேரிலுள்ள

# நாலாயிரத்திவ்ய பிரபந்தத் தொகுப்பு

வெளியீடு :-

ஆயர்பாடி ஸ்ரீ ஆழ்வார்கள் ஆச்சிரமம்

"ஆயர்பாடி லேன்"
மாவிட்டபுரம்
தெல்லிப்பளை

ஸ்ரீ

ஸ்ரீராமஜெயம்

# பொருளடக்கம்


| | | பக்கம் |
|---|---|---|
| காப்பு | – | 1 |
| ஸ்ரீபெரியாழ்வார் அருளிய "வண்ணமாடங்கள்" | – | 2 |
| ஸ்ரீ ஆண்டாள் அருளிய "மார்கழித்திங்கள்" | – | 4 |
| ஸ்ரீ குலசேகராழ்வார் அருளிய "இருளிரியச்சுடர்" | – | 14 |
| ஸ்ரீ திருமழிசையாழ்வார் அருளிய "பூநிலாயஜந்துமாய்" | – | 17 |
| ஸ்ரீ தொண்டரடிப் பொடியாழ்வார் அருளிய "கதிரவன்குணதிசை" | – | 19 |
| ஸ்ரீ திருப்பாணாழ்வார் அருளிய "அமலனாதிபிரான்" | – | 22 |
| ஸ்ரீ மதுரகவியாழ்வார் அருளிய "கண்ணிநுண் சிறுத்தாம்பு" | – | 24 |
| ஸ்ரீ திருமங்கையாழ்வார்அருளிய "வாடினேன் வாடிவருந்தி" | – | 26 |
| ஸ்ரீ பொய்கையாழ்வார் அருளிய "வையம்தகளியா" | – | 29 |
| ஸ்ரீ பூதத்தாழ்வார் அருளிய "அன்பே தகளியா" | – | 31 |
| ஸ்ரீ பேயாழ்வார் அருளிய "திருக்கண்டேன்" | – | 33 |
| ஸ்ரீ நம்மாழ்வார் அருளிய (அ) "உயர்வற உயர்நலம்" | – | 35 |
| " " (ஆ) "உலகமுண்ட பெருவாயா" | – | 37 |
| " " (இ) "கங்குலும் பகலும்" | – | 39 |
| " " (ஈ) "கெடும் இடர்" | – | 42 |
| " " (உ) "மண்ணையிருந்து" | – | 44 |
| " " (ஊ) "வெள்ளைச் சுரிசங்கு" | – | 46 |
| " " (எ) "ஆராவமுதே!" | – | 50 |
| " " (ஏ) "கற்பார் இராமபிரானை" | – | 52 |
| " " (ஐ) "கோவைவாயாள் பொருட்டு" | – | 54 |
| " " (ஒ) "கையார் சக்கரத்து" | – | 56 |
| " " (ஓ) "பொலிக பொலிக" | – | 59 |
| " " (ஔ) "ஆழியெழச் சங்கு" | – | 62 |
| ஸ்ரீ திருமங்கையாழ்வார்அருளிய "வாணிலா முறுவல்" | – | 64 |
| ஸ்ரீ பெரியாழ்வார் அருளிய "நெய்க்குடத்தை" | – | 67 |
| திருநெடுந்தாண்டகம் – திருப்பல்லாண்டு | – | 69 |
| கெருடாழ்வார் வருகை | – | 70 |
| நாம ராமாயணம்: "சுத்த பரஹ்ம பராத்பர ராம" | – | 76 |
| ஆஞ்சநேயர் நாமாவளி | – | 78 |
| அனுமார் அனுபூதி | – | 81 |
| மங்களம்: "ஸ்ரீ ராமச்சந்திரனுக்கு ஜெய மங்களம்" | – | 83 |
| நவக்கிரக வழிபாடு | – | 85 |

ஸ்ரீ

அரி ஓம் நமோ

ஸ்ரீ ராம ஜெயம்

## திருக்காப்பு

பல்லாண்டு பல்லாண்டு பல்லாயிரத்தாண்டு
பலகோடி நூறாயிரம்
மல்லாண்ட திண்தோள் மணிவண்ணா! உன்
சேவடி செவ்வித் திருக்காப்பு

## காப்பு

பொய்கை பூதன் பேயார் பொன்மகிழைக் கோன்மாறன்
செய்ய மதுரகவி சேரர்பிரான் – வையகமென்
பட்டர்பிரான் கோதை தொண்டர் பாதப்பொடி பாணன்
கட்டவிழ்த்தார் வாட்கலியன் காப்பு.

## ஸ்ரீ ஆழ்வார்கள் வாழ்த்து

போதமிகும் பொய்கையார் பூதத்தார் வாழியே
புகழ்பேயார் மழிசையர் கோன் புத்தூரன் வாழியே
நாதமுனி தொழுங்குருகை நாவீறன் வாழியே
நற்பாணன் கொல்லிநகர் நாதனார் வாழியே
ஆதரிக்குந் தொண்டரடிப்பொடி தாள்கள் வாழியே
அருட்கலியன் மதுரகவி ஆண்டாளும் வாழியே
ஏதமற்ற நாலாயிரப் பனுவல்களும் வாழியே
இவருதித்த நாள் மாதமெழிற்பதியும் வாழியே.

ஸ்ரீ பெரியாழ்வார் அருளிச் செய்த

# திருமொழி

## கண்ணன் திருவவதாரச் சிறப்பு

அபரூபராகம் - அடதாளம்

வண்ணமாடங்கள் சூழ்திருக் கோட்டியூர்
கண்ணன் கேசவன் நம்பி பிறந்தினில்
எண்ணெய் சுண்ணம் எதிரெதிர் தூவிட
கண்ணன் முற்றம் கலந்து அளருயிற்றே. 1

ஓடுவார் விழுவார் உகந்தாலிப்பார்
நாடுவார் நம்பிரான் எங்குற்ரு னென்பார்
பாடுவார்களும் பல்பறைகொட்ட நின்று
ஆடுவார்களும் ஆயிற்று ஆய்ப்பாடியே. 2

பேணிச் சீருடைப் பிள்ளை பிறந்தினில்
காணத்தாம்புகுவார் புக்குப் போதுவார்
ஆணெப்பார் இவன் நேரில்லை காண்திரு
வோணத்தான் உலகாளுமென்பார்களே. 3

உறியை முற்றத்து உருட்டி நின்ருடுவார்
நறுநெய்பால்தயிர் நன்ருகத் தூவுவார்
செறிமென்கூந்தல் அவிழத்திளைத்து எங்கும்
அறிவழிந்தனர் ஆய்ப்பாடி யாயரே. 4

கொண்டதாளுறி கோலக்கொடு மழு
தண்டினர் பறியோலைச் சயனத்தர்
விண்டமுல்லை யரும்பன்ன பல்லினர்
அண்டர் மிண்டிப் புகுந்து நெய்யாடினார். 5

கையும் காலும் நிமிர்த்துக் கடாரநீர்
பையவாட்டிப் பசுஞ்சிறு மஞ்சளால்
ஐயநாவழித் தாளுக்கு அங்காந்திட
வைய மேழும்கண்டாள் பிள்ளை வாயுளே. 6

வாயுள் வையகம் கண்ட மடநல்லார்
ஆயர் புத்திர னல்லன் அருந் தெய்வம்
பாய சீருடைப் பண்புடைப் பாலகன்
மாயனென்று மகிழ்ந்தனர் மாதரே. 7

பத்துநாளும் கடந்த இரண்டாநாள்
எத்திசையும் சயமரம் கோடித்து
மத்தமாமலை தாங்கிய மைந்தனை
உத்தானம் செய்து உகந்தனர் ஆயரே. 8

கிடக்கில் தொட்டில் கிழிய உதைத்திடும்
எடுத்துக் கொள்ளில் மருங்கை யிறுத்திடும்
ஒடுக்கிப் புல்கில் உதரத்தே பாய்ந்திடும்
மிடுக்கிலாமையால் நான் மெலிந்தேன் நங்காய். 9

செந்நெலார் வயல்சூழ் திருக் கோட்டியூர்
மன்னுநாரணன் நம்பி பிறந்தமை
மின்னுநூல் விட்டு சித்தன் விரித்த இப்
பன்னுபாடல் வல்லார்க்கு இல்லை பாவமே. 10

ஸ்ரீ பெரியாழ்வார் திருவடிகளே சரணம்

கோவிந்தா! .......கோ.......விந்தா!!

கண்ணன் பிறந்து விட்டான், என்று, ஆயர் பாடியில் மகிழ்ச்சி வெள்ளம் கரைபுரண்டு ஓடுகிறது. ஆயாகள, ஆடுகிறார்கள், பாடுகிறார்கள், பறை கொட்டுகிறார்கள். பிறந்த நாள் விழா, வெகுவிமரிசையாகக் கொண்டாடப் படுகிறது. ஆம்! நாங்களும் விழா எடுக்க வேண்டாமா? பத்திப் பெருவிழாவாக, ஆண்டு தோறும், ஆவணி மாதத்தில் வருகின்ற 'ஸ்ரீ கிருஷ்ண ஜெயந்தி திருநாளை மறந்துவிடாதீர்கள்'

ஸ்ரீ ராம ஜெயம்

ஸ்ரீ ஆண்டாள் அருளிச் செய்த

# திருப்பாவை

பிலஹரி ராகம் - அடதாளம்

மார்கழித் திங்கள் மதிநிறைந்த நன்னாளால்
நீராடப் போதுவீர்! போதுமினோ நேரிழையீர்!
சீர்மல்கும் ஆய்ப்பாடிச் செல்வச் சிறுமீர்காள்!
கூர்வேல் கொடுந்தொழிலன் நந்தகோபன் குமரன்
ஏரார்ந்த கண்ணி யசோதை இளஞ்சிங்கம்
கார்மேனிச் செங்கண் கதிர்மதியம் போல்முகத்தான்
நாராயணனே, நமக்கே பறைதருவான்
பாரோர் புகழப் படிந்தேலோ ரெம்பாவாய். 1

பந்துவராளிராகம் - ஆதிதாளம்

வையத்து வாழ்வீர்காள்! நாமும் நம் பாவைக்கு
செய்யும் கிரியைகள் கேளீரோ பாற்கடலுள்
பையத் துயின்ற பரமன் அடிபாடி
நெய்யுண்ணோம் பாலுண்ணோம் நாட்காலே நீராடி
மையிட் டெழுதோம் மலரிட்டு நாம்முடியோம்
செய்யாதன செய்யோம் தீக்குறளை சென்றோதோம்
ஐயமும் பிச்சையும் ஆந்தனையும் கைகாட்டி
உய்யுமா றெண்ணி உகந்தேலோ ரெம்பாவாய். 2

பந்துவராளிராகம் - திரிபுடை தாளம்

ஓங்கி உலகளந்த உத்தமன் பேர்பாடி
நாங்கள் நம் பாவைக்குச் சாற்றிநீர் ஆடினால்
தீங்கின்றி நாடெல்லாம் திங்கள் மும்மாரிபெய்து
ஓங்கு பெருஞ்செந்நெ லூடு கயல் உகளப்
பூங்குவளைப் போதில் பொறிவண்டு கண்படுப்ப
தேங்காதே புக்கிருந்து சீர்த்த முலைபற்றி
வாங்க குடம் நிறைக்கும் வள்ளல் பெரும்பசுக்கள்
நீங்காத செல்வம் நிறைந்தேலோ ரெம்பாவாய். 3

காம்போதிராகம் - அடதாளம்

ஆழி மழைக்கண்ணு! ஒன்று நீ கைகரவேல்
ஆழியுள் புக்கு முகந்துகொடு ஆர்த்தேறி
ஊழி முதல்வ னுருவம்போல் மெய்கறுத்து
பாழியந் தோளுடைப் பத்மநாபன் கையில்
ஆழிபோல் மின்னி வலம்புரிபோல் நின்றதிர்ந்து
தாழாதே சார்ங்க முதைத்த சரமழைபோல்
வாழ உலகினில் பெய்திடாய் நாங்களும்
மார்கழி நீராட மகிழ்ந்தேலோ ரெம்பாவாய். 4

தோடிராகம் - ரூபகதாளம்

மாயனை மன்னு வடமதுரை மைந்தனை
தூய பெருநீர் யமுனைத் துறைவனை
ஆயர் குலத்தினில் தோன்றும் அணிவிளக்கை
தாயைக் குடல்விளக்கம் செய்த தாமோதரனை
தூயோமாய் வந்துநாம் தூமலர் தூவித்தொழுது
வாயினால் பாடி மனத்தினால் சிந்திக்க
போய பிழையும் புகுதருவான் நின்றனவும்
தீயினில் தூசாகும் செப்பேலோ ரெம்பாவாய். 5

பூபாளராகம் - ஆதிதாளம்

புள்ளும் சிலம்பின காண் புள்ளரையன் கோயிலில்
வெள்ளை விளிசங்கின் பேரரவம் கேட்டிலையோ?
பிள்ளாய்! எழுந்திராய், பேய்முலை நஞ்சுண்டு
கள்ளச் சகடம் கலக்கழியக் காலோச்சி
வெள்ளத் தரவில் துயிலமர்ந்த வித்தினை
உள்ளத்துக் கொண்டு முனிவர்களும் யோகிகளும்
மெள்ள எழுந்து அரியென்ற பேரரவம்
உள்ளம் புகுந்து குளிர்ந்தேலோ ரெம்பாவாய். 6

பூபாளராகம் - ரூபகதாளம்

கீசுகீசென்று எங்கும் ஆனைச்சாத்தன் கலந்து
பேசின பேச்சரவம் கேட்டிலையோ? பேய்ப்பெண்ணே!

காசும் பிறப்பும் கலகலப்பக் கைபேர்த்து
வாச நறுங்குழ லாய்ச்சியர் மத்திறல்
ஓசை படுத்த தயிரரவம் கேட்டிலையோ?
நாயகப் பெண்பிள்ளாய்! நாராயணன் மூர்த்தி
கேசவனைப் பாடவும் நீ கேட்டே கிடத்தியோ?
தேச முடையாய்! திறவேலோ ரெம்பாவாய். 7

பூபாளராகம் - ஆதிதாளம்

கீழ்வானம் வெள்ளென்று எருமை சிறுவீடு
மேய்வான் பரந்தனகாண் மிக்குள்ள பிள்ளைகளும்
போவான் போகின்றாரைப் போகாமல் காத்து உன்னைக்
கூவுவான் வந்து நின்றோம் கோது கலமுடைய
பாவாய்! எழுந்திராய் பாடிப் பறைகொண்டு
மாவாய் பிளந்தானை மல்லரை மாட்டிய
தேவாதி தேவனைச் சென்றுநாம் சேவித்தால்
ஆவாவென் றாராய்ந் தருளேலோ ரெம்பாவாய். 8

மோஹனராகம் - ஆதிதாளம்

தூமணி மாடத்துச் சுற்றும் விளக்கெரிய
தூபங் கமழத் துயிலணை மேல் கண்வளரும்
மாமன் மகளே! மணிக்கதவம் தாள்திறவாய்
மாமீர்! அவளை எழுப்பீரோ? உம் மகள்தான்
ஊமையோ? அன்றிச் செவிடோ? அனந்தலோ?
ஏமப் பெருந்துயில் மந்திரப் பட்டாளோ?
மாமாயன் மாதவன் வைகுந்தன் என்றென்று
நாமம் பலவும் நவின்றேலோ ரெம்பாவாய். 9

அஸாவேம்ராகம் - ஆதிதாளம்

நோற்றுச் சுவர்க்கம் புகுகின்ற அம்மனாய்!
மாற்றமும் தாராரோ? வாசல் திறவாதார்
நாற்றத் துழாய்முடி நாராயணன் நம்மால்
போற்றப் பறைதரும் புண்ணியனால் பண்டொருநாள்
கூற்றத்தின் வாய்வீழ்ந்த கும்ப கரணனும்

தோற்றும் உனக்கே பெருந்துயில்தான் தந்தானோ?
ஆற்ற அனந்தல் உடையாய்! அருங்கலமே!
தேற்றமாய் வந்து திறவேலோ ரெம்பாவாய். 10

சகானாராகம் - திரிபுடைதாளம்

கற்றுக் கறவைக் கணங்கள் பலகறந்து
செற்றார் திறலழியச் சென்று செருச்செய்யும்
குற்றமொன் றில்லாத கோவலர்தம் பொற்கொடியே!
புற்றர வல்குல் புனமயிலே! போதராய்!
சுற்றத்துத் தோழிமார் எல்லாரும் வந்துநின்
முற்றம் புகுந்து முகில்வண்ணம் பேர்பாட
சிற்றாதே பேசாதே செல்வப்பெண் டாட்டி! நீ
எற்றுக்கு உறங்கும் பொருளேலோ ரெம்பாவாய். 11

கேதாரகௌளராகம் - ஆதிதாளம்

கனைத்திளங் கற்றெருமை கன்றுக் கிரங்கி
நினைத்து முலைவழியே நின்றுபால் சோர
நனைத்தில்லம் சேறாக்கும் நற்செல்வன் நங்காய்!
பனித்தலை வீழநின் வாசற் கடைபற்றிச்
சினத்தினால் தென்னிலங்கைக் கோமானைச் செற்ற
மனத்துக் கினியானைப் பாடவும் நீ வாய்திறவாய்!
இனித்தான் எழுந்திராய் ஈதென்ன பேருறக்கம்!
அனைத்தில்லத் தாரும் அறிந்தேலோ ரெம்பாவாய். 12

அடாணாராகம் - ரூபகதாளம்

புள்ளின்வாய் கீண்டானைப் பொல்லா அரக்கனைக்
கிள்ளிக் களைந்தானைக் கீர்த்திமை பாடிப்போய்
பிள்ளைகளெல்லாரும் பாவைக் களம்புக்கார்
வெள்ளிஎழுந்து வியாழம் உறங்கிற்று
புள்ளும் சிலம்பினகாண் போதரிக் கண்ணினாய்!
குள்ளக் குளிரக் குடைந்துநீ ராடாதே
பள்ளிக் கிடத்தியோ? பாவாய்! நீ நன்னாளால்
கள்ளம் தவிர்ந்து கலந்தேலோ ரெம்பாவாய். 13

ஸாரங்காராகம் - ஆதிதாளம்

உங்கள் புழைக்கடைத் தோட்டத்து வாவியுள்
செங்கழுநீர் வாய்நெகிழ்ந்து ஆம்பல்வாய் கூம்பினகாண்
செங்கல் பொடிக்கூறை வெண்பல் தவத்தவர்
தங்கள் திருக்கோயில் சங்கிடுவான் போகின்றார்
எங்களை முன்னம் எழுப்புவான் வாய்பேசும்
நங்காய்! எழுந்திராய் நாணாதாய்! நாவுடையாய்!
சங்கொடு சக்கரம் ஏந்தும் தடக்கையன்
பங்கயக் கண்ணானைப் பாடேலோ ரெம்பாவாய். 14

ஸௌராஷ்ட்ரராகம் - அடதாளம்

எல்லே! இளங்கிளியே! இன்னம் உறங்குதியோ?
சில்லென் றழையேன்மின்! நங்கைமீர்! போதர்கின்றேன்
வல்லை உன் கட்டுரைகள் பண்டேஉன் வாயறிதும்
வல்லீர்கள் நீங்களே நானேதா னாயிடுக
ஒல்லைநீ போதாய் உனக்கென்ன வேறுடையை
எல்லாரும் போந்தாரோ? போந்தார், போந்தெண்ணிக்கொள்
வல்லானை கொன்றானை, மாற்றாரை மாற்றழிக்க
வல்லானை மாயனைப் பாடேலோ ரெம்பாவாய் 15

யமுனாகல்யாணிராகம் - ஆதிதாளம்

நாயக னாய்நின்ற நந்தகோ பனுடைய
கோயில் காப்பானே! கொடித்தோன்றும் தோரண
வாயில் காப்பானே! மணிக்கதவம் தாள்திறவாய்
ஆயர் சிறுமிய ரோமுக்கு அறைபறை
மாயன் மணிவண்ணன் நென்னலே வாய்நேர்ந்தான்
தூயோமாய் வந்தோம் துயிலெழப் பாடுவான்
வாயால் முன்னம் முன்னம் மாற்றாதே அம்மா! நீ
நேய நிலைக்கதவம் நீக்கேலோ ரெம்பாவாய். 16

யமுனாகல்யாணிராகம் - ரூபகதாளம்

அம்பரமே தண்ணீரே சோறே அறஞ்செய்யும்
எம்பெருமான்! நந்தகோபாலா! எழுந்திராய்!
கொம்பனார்க் கெல்லாம் கொழுந்தே குலவிளக்கே!
எம்பெருமாட்டி! யசோதாய்! அறிவுறாய்

அம்பரம் ஊடறுத் தோங்கி உலகளந்த
உம்பர் கோமானே! உறங்காது எழுந்திராய்
செம்பொற் கழலடிச் செல்வா! பலதேவா
உம்பியும் நீயும் உறங்கேலோ ரெம்பாவாய். 17

சாவேரிராகம் - ஆதிதாளம்

உந்து மதகளிற்றன் ஓடாத தோள்வலியன்
நந்த கோபாலன் மருமகளே! நப்பின்ஞய்!
கந்தம் கமழும் குழலி! கடைதிறவாய்
வந்து எங்கும் கோழி அழைத்தனகாண் மாதவிப்
பந்தல்மேல் பல்கால் குயிலினங்கள் கூவினகாண்
பந்தார் விரலி! உன் மைத்துனன் பேர்பாட
செந்தா மரைக்கையால் சீரார் வளையொலிப்ப
வந்து திறவாய் மகிழ்ந்தேலோ ரெம்பாவாய். 18

ஸ்ரீராகம் - ஆதிதாளம்

குத்து விளக்கெரியக் கோட்டுக்கால் கட்டில்மேல்
மெத்தென்ற பஞ்ச சயனத்தின் மேலேறி
கொத்தலர் பூங்குழல் நப்பின்னை கொங்கைமேல்
வைத்துக் கிடந்த மலர்மார்பா! வாய்திறவாய்
மைத்தடங் கண்ணிஞய்! நீ உன் மஞளனை
எத்தனை போதும் துயிலெழ வொட்டாய்காண்
எத்தனை யேலும் பிரிவாற்ற கில்லாயால்
தத்துவமன்று தகவேலோ ரெம்பாவாய். 19

தேசியராகம் - ஆதிதாளம்

முப்பத்து மூவர் அமரர்க்கு முன்சென்று
கப்பம் தவிர்க்கும் கலியே! துயிலெழாய்
செப்பமுடையாய்! திறலுடையாய்! செற்ருர்க்கு
வெப்பம் கொடுக்கும் விமலா! துயிலெழாய்
செப்பன்ன மென்முலை செவ்வாய் சிறுமருங்குல்
நப்பின்னை நங்காய்! திருவே! துயிலெழாய்
உக்கமும் தட்டொளியும் தந்து உன்மஞளனை
இப்போதே எம்மை நீராட்டேலோ ரெம்பாவாய். 20

தேசிகராகம் - ஆதிதாளம்

ஏற்ற கலங்கள் எதிர்பொங்கி மீதளிப்ப
மாற்ருதே பால்சொரியும் வள்ளல் பெரும்பசுக்கள்
ஆற்றப் படைத்தான் மகனே! அறிவுருய்
ஊற்றமுடையாய்! பெரியாய்! உலகினில்
தோற்றமாய் நின்ற சுடரே! துயிலெழாய்
மாற்ருர் உனக்கு வலிதொலைந்து உன்வாசற்கண்
ஆற்ருது வந்து உன் அடிபணியு மாபோலே,
போற்றியாம் வந்தோம் புகழ்ந்தேலோ ரெம்பாவாய். 21

பைரவிராகம் - ஆதிதாளம்

அங்கண்மா ஞாலத் தரசர் அபிமான
பங்கமாய் வந்துநின் பள்ளிக்கட்டிற்கீழே
சங்கமிருப்பார்போல் வந்துதலைப் பெய்தோம்
கிங்கிணி வாய்ச்செய்த தாமரைப் பூப்போலே
செங்கண் சிறுச்சிறிதே எம்மேல் விழியாவோ?
திங்களும் ஆதித்தியனும் எழுந்தாற்போல்
அங்கணிரண்டுங்கொண்டு எங்கள்மேல் நோக்குதியேல்
எங்கள்மேல் சாபம் இழிந்தேலோ ரெம்பாவாய். 22

அடாணுராகம் - ஆதிதாளம்

மாரி மழைமுறைஞ்சில் மன்னிக் கிடந்துறங்கும்
சீரிய சிங்கம் அறிவுற்றுத் தீவிழித்து
வேரி மயிர்பொங்க எப்பாடும் பேர்ந்துதறி
மூரி நிமிர்ந்து முழங்கிப் புறப்பட்டு
போதருமாப் போலே நீ பூவைப்பூ வண்ணு! உன்
கோயில் நின்றும் இங்ஙனே போந்தருளிக் கோப்புடைய
சீரிய சிங்காசனத்து இருந்து யாம்வந்த
காரியம் ஆராய்ந் தருளேலோ ரெம்பாவாய். 23

பியாகடைராகம் - ஆதிதாளம்

அன்று இவ்வுலகம் அளந்தாய்! அடிபோற்றி
சென்றங்குத் தென்னிலங்கை செற்ருய்! திறல்போற்றி
போன்றச் சகடம் உதைத்தாய்! புகழ்போற்றி
கன்று குணிலா எறிந்தாய்! கழல்போற்றி
குன்று குடையாய் எடுத்தாய்! குணம்போற்றி
வென்று பகைகெடுக்கும் நின்கையில் வேல்போற்றி
என்றென்று உன்சேவகமே ஏத்திப் பறைகொள்வான்
இன்றுயாம் வந்தோம் இரங்கேலோ ரெம்பாவாய். 24

சங்கராபரணராகம் - ஆதிதாளம்

ஒருத்தி மகனுய்ப் பிறந்து ஓரிரவில்
ஒருத்தி மகனுய் ஒளித்து வளர
தரிக்கிலா னுகித் தான்தீங்கு நினைத்த
கருத்தைப் பிழைப்பித்துக் கஞ்சன் வயிற்றில்
நெருப்பென்ன நின்ற நெடுமாலே! உன்னை
அருச்சித்து வந்தோம் பறைதருதி யாகில்
திருத்தக்க செல்வமும் சேவகமும் யாம்பாடி
வருத்தமுந் தீர்ந்து மகிழ்ந்தேலோ ரெம்பாவாய். 25

ஆரபிராகம் - ஆதிதாளம்

மாலே! மணிவண்ணு! மார்கழிநீ ராடுவான்
மேலையார் செய்வனகள் வேண்டுவன கேட்டியேல்
ஞாலத்தை யெல்லாம் நடுங்க முரல்வன
பாலன்ன வண்ணத்து உன்பாஞ்ச சன்னியமே
போல்வன சங்கங்கள் போய்ப்பா டுடையனவே
சாலப் பெரும்பறையே பல்லாண் டிசைப்பாரே
கோல விளக்கே! கொடியே! விதானமே!
ஆலினிலையாய்! அருளேலோ ரெம்பாவாய். 26

ஆனந்தபைரவிராகம் - ஆதிதாளம்

கூடாரை வெல்லும்சீர்க் கோவிந்தா! உன்தன்னைப்
பாடிப் பறைகொண்டு யாம்பெறு சன்மானம்
நாடு புகழும் பரிசினுல் நன்ருக
சூடகமே தோள்வளையே தோடே செவிப்பூவே
பாடகமே யென்றனைய பல்கலனும் யாமணிவோம்
ஆடையுடுப்போம் அதன்பின்னே பால்சோறு
மூட நெய் பெய்து முழங்கை வழிவார
கூடியிருந்து குளிர்ந்தேலோ ரெம்பாவாய். 27

தன்யாசிராகம் - ஆதிதாளம்

கறவைகள் பின்சென்று கானம்சேர்ந் துண்போம்
அறிவொன்றுமில்லாத ஆய்க்குலத்து உன்தன்னைப்
பிறவி பெறுந்தனை புண்ணியம் யாமுடையோம்
குறைவொன்று மில்லாத கோவிந்தா! உன்தன்னேடு
உறவேல் நமக்கு இங்கு ஒழிக்க ஒழியாது
அறியாத பிள்ளைகளோம் அன்பினுல் உனறன்னைச்
சிறுபேரழைத்தனவும் சீறியருளாதே
இறைவா! நீ தாராய் பறையேலோ ரெம்பாவாய். 28

கல்யாணிராகம் - ஆதிதாளம்

சிற்றஞ் சிறுகாலே வந்து உன்னைச் சேவித்துன்
பொற்ரு மரையடியே போற்றும் பொருள்கேளாய்
பெற்றம் மேய்த்துண்ணும் குலத்தில் பிறந்துநீ
குற்றேவல் எங்களைக் கொள்ளாமல் போகாது
இற்றைப் பறைகொள்வா னன்றுகாண் கோவிந்தா!
எற்றைக்கும் ஏழேழ் பிறவிக்கும் உன்தன்னேடு
உற்ருேமே யாவோம் உனக்கேநாம் ஆட்செய்வோம்
மற்றைநங் காமங்கள் மாற்றேலோ ரெம்பாவாய். 29

சுருட்டிராகம் - ரூபகதாளம்

வங்கக் கடல்கடைந்த மாதவனைக் கேசவனை
திங்கள் திருமுகத்துச் சேயிழையார் சென்றிறைஞ்சி
அங்கப் பறைகொண்ட வாற்றை அணிபுதுவைப்
பைங்கமலத் தண்தெரியல் பட்டர்பிரான் கோதைசொன்ன
சங்கத் தமிழ்மாலை முப்பதும் தப்பாமே
இங்கு இப்பரிசுரைப்பார் ஈரிரண்டு மால்வரைத்தோள்
செங்கண் திருமுகத்துச் செல்வத் திருமாலால்
எங்கும் திருவருள்பெற்று இன்புறுவ ரெம்பாவாய். 30

ஸ்ரீ ஆண்டாள் திருவடிகளே சரணம்.

*மார்கழி நோன்பு முப்பது நாள்கள்*

''மாதங்களில் நான் மார்கழி'' முழங்கியுள்ளான் கோவிந்தன். கன்னிப்பெண்கள் பாவை நோன்பு நோற்பார்கள் இம்மாதத்தில் தான். ஏன் சுமங்கலிகளும் கூட பங்கு கொள்வார்கள். விடியற்காலை எழுந்து நீராடி மங்கல விளக்கேற்றி, மனை வாசலில் மஞ்சள் குங்குமத்துடன் அழகிய கோலமிட்டு வைப்பார்கள். கொதிக்கும் சூரியனின் குளிர் நிலைதான் விடியற்காலம். நம் துன்பங்கள் யாவும் போயகல, வாழ்வு சிறக்க நீங்களும் இதைக் கைக் கொளல் ஆகாதா. முயன்றால் முடியாதது யாதுமில்லை. அதிகாலை நித்திரை விட்டெழுந்து உடற்சுத்தம் செய்து நீங்களும் உங்கள் இல்லம் சிறக்க வாழ்வு பெருக, மார்கழி நோன்பு நோற்க ஆயத்தமாகி விட்டீர்களா?

ஸ்ரீ ராம ஜெயம்

## ஸ்ரீ குலசேகரப் பெருமாள் அருளிச்செய்த

# பெருமாள் திருமொழி

## அழகிய மணவாளன் விஷயம்

### பந்துவராளிராகம் - ஆதிதாளம்

இருளிரியச்சுடர்மணிகள் இமைக்கும் நெற்றி
இனத்துத்தியணி பணம் ஆயிரங்களார்ந்த
அரவரசப் பெருஞ்சோதி அனந்தனென்னும்
அணிவிளங்கும் உயர்வெள்ளையணையை மேவி
திருவரங்கப்பெரு நகருள் தெண்ணீர்ப்பொன்னி
திரைக்கையால் அடிவருடப்பள்ளி கொள்ளும்
கருமணியைக் கோமளத்தைக்கண்டு கொண்டுஎன்
கண்ணிணைகள் என்றுகோலோ களிக்கும் நாளே? 1

வாயோரீரைஞ்ஞுறுது தங்களார்ந்த
வளையுடம்பினழல் நாகம் உமிழ்ந்தசெந்தீ
வீயாதமலாச் சென்னி விதானமேபோல்
மேன்மேலும்மிக எங்கும் பரந்ததன்கீழ்
காயாம்பூமலர்ப் பிறங்கலன்னமாலைக்
கடியரங்கத்தரவணையில் பள்ளிகொள்ளும்
மாயோனை, மணத்தூணேபற்றி நின்று என்
வாயார என்று கொலோ வாழ்த்தும் நாளே? 2

எம்மாண்பினயன் நான்கு நாவினாலும்
எடுத்தேத்தி ஈரிரண்டுமுகமும் கொண்டு
எம்மாடும் எழிற்கண்களெட்டினோடும்
தொழுதேத்தி இனிதிறைஞ்ச நின்ற செம்பொன்
அம்மான் தன்மலர்க்கமலக் கொப்பூழ்தோன்ற
அணியரங்கத்தரவணையில் பள்ளிகொள்ளும்
அம்மான் தனடியிணைக்கீழ் அலர்களிட்டு அங்கு
அடியவரோடு என்றுகொலோ அணுகும் நாளே? 3

மாவினை வாய்பிளந்து கந்தமாலை வேலை
வண்ணனை என் கண்ணனை வன்குன்றமேந்தி
ஆவினை அன்றுய்யக் கொண்ட ஆயரேற்றை
அமரர்கள் தந்தலைவனை அந்தமிழினின்பப்
பாவினை அவ்வடமொழியைப் பற்றற்றுர்கள்
பயிலரங்கத்தரவணையில் பள்ளிகொள்ளும்
கோவினை நாவுற வழுத்தி என்தன்கைகள்
கொய்ம்மலர்தூய் என்று கொலோ கூப்பும் நாளே? 4

இணையில்லா இன்னிசையாழ் கெழுமி இன்பத்
தும்புருவும் நாரதனும் இறைஞ்சியேத்த
துணையில்லாத் தொன்மறை நூல்தோத்திரத்தால்
தொன்மலர்க் கணயன் வணங்கியோவாதேத்த
மணிமாடமாளிகைகள் மல்கு செல்வ
மதிளரங்கத்தரவணையில் பள்ளிகொள்ளும்
மணிவண்ணனம் மானைக்கண்டு கொண்டுஎன்
மலர்ச்சென்னி என்றுகொலோ வணங்கும் நாளே? 5

அளிமலர் மேலயனரனிந்திரனோடு ஏனை
அமரர்கள் தம்குழுவும் அரம்பையரும் மற்றும்
தெளிமதிசேர்முனிவர்கள் தம்குழுவும் முந்தித்
திசைதிசையில் மலர் தூவிச்சென்று சேரும்
களிமலர் சேர்பொழிலரங்கத்து உரகமேறிக்
கண்வளரும் கடல்வண்ணர் கமலக்கண்ணும்
ஒளிமதிசேர் திருமுகமும்கண்டு கொண்டு என்
உள்ளம்மிக என்று கொலோஉருகும் நாளே? 6

மறம்திகழும் மனமொழித்து வஞ்சம்மாற்றி
ஐம்புலன்களடக்கி இடர்ப்பாரத்துன்பம்
துறந்து இருமுப்பொழுதேத்தி எல்லையில்லாத்
தொன்னெறிக்கண் நிலைநின்ற தொண்டரான
அறம்திகழும் மனத்தவர்தம் கதியைப் பொன்னி
யணியரங்கத்தரவணையில் பள்ளிகொள்ளும்
நிறம்திகழும் மாயோனைக்கண்டு என் கண்கள்
நீர்மல்க என்றுகொலோ நிற்கும் நாளே? 7

கோலார்ந்த நெடுஞ்சார்ங்கம் கூனற்சங்கம்
கொலையாழி கொடுந்தண்டு கொற்றவொள்வாள்
காலார்ந்தகதிக் கருடனென்னும் வென்றிக்
கடும்பறவை இவையனைத்தும் புறஞ்சூழ்காப்ப
சேலார்ந்த நெடுங்கழனி சோலைசூழ்ந்த
திருவரங்கத்தரவணையில் பள்ளிகொள்ளும்
மாலோனைக், கண்டு இன்பக்கலவியெய்தி
வல்வினையேன் என்று கொலோ வாழும் நாளே? 8

தூராத மனக்காதல் தொண்டர் தங்கள்
குழாம்குழுமித் திருப்புகழ்கள் பலவும் பாடி
ஆராதமனக்களிப்போடு அழுத கண்ணீர்
மழைசோர நினைந்துருகியேத்தி நாளும்
சீரார்ந்த முழவோசை பரவைகாட்டும்
திருவரங்கத்தரவணையில் பள்ளிகொள்ளும்
போராழியம்மானைக் கண்டு துள்ளிப்
பூதலத்தில் என்று கொலோ புரளும் நாளே? 9

வன்பெருவானக முய்ய அமரருய்ய
மண்ணுய்ய மண்ணுலகில் மனிதருய்ய
துன்பமிகு துயரகல அயர்வொன்றில்லாச்
சுகம்வளர அகமகிழும் தொண்டர் வாழ
அன்பொடு தென்திசை நோக்கிப் பள்ளிகொள்ளும்
அணியரங்கன் திருமுற்றத்து அடியார் தங்கள்
இன்பமிகு பெருங்குழுவு கண்டுயானும்
இசைந்துஉடனே என்று கொலோ இருக்கும் நாளே? 10

திடர்விளங்கு கரைப்பொன்னி நடுவு பாட்டுத்
திருவரங்கத்தரவணையில் பள்ளிகொள்ளும்
கடல்விளங்கு கருமேனியம்மான் தன்னைக்
கண்ணாரக்கண்டுக்கும் காதல் தன்னால்
குடைவிளங்கு விறல்தானைக் கொற்றவொள்வாள்
கூடலர்கோன்கொடைக் குலசேகரன் சொற்செய்த
நடைவிளங்கு தமிழ்மாலை பத்தும் வல்லார்
நலந்திகழ் நாரணனடிக்கீழ் நண்ணுவாரே. 11

ஸ்ரீ குலசேகரப்பெருமாள் திருவடிகளே சரணம்.

ஸ்ரீராமஜெயம்

## ஸ்ரீ திருமழிசைப்பிரான் அருளிச்செய்த

# திருச்சந்த விருத்தம்

தத்வநிலை பரந்தாமனே யெனல்

யமுனாகல்யாணிராகம் - ரூபகதாளம்

பூ நிலாய ஐந்துமாய்ப் புனற்கண் நின்ற நான்குமாய்
தீ நிலாய மூன்று மாய்ச் சிறந்த காலிரண்டுமாய்
மீ நிலாய தொன்றுமாகி வேறு வேறு தன்மையாய்
நீ நிலாய வண்ணம் நின்னையார் நினைக்கவல்லரே? 1

ஆறுமாறு மாறுமாய் ஓரைந்துமைந்து மைந்துமாய்
ஏறுசீ ரிரண்டு மூன்றும் ஏழுமாறு மெட்டுமாய்
வேறுவேறு ஞானமாகி மெய்யினோடு பொய்யுமாய்
ஊறொடோசையாய ஐந்தும் ஆயஆயமாயனே! 2

ஐந்துமைந்து மைந்துமாகி அல்லவற்றுளாயுமாய்
ஐந்துமூன்று மொன்றுமாகி நின்ற ஆதிதேவனே!
ஐந்துமைந்து மைந்துமாகி அந்தரத்தணைந்து நின்று
ஐந்துமைந்துமாய நின்னை யாவர் காண வல்லரே? 3

மூன்று முப்பத்தாறினோடு ஓரைந்து மைந்து மைந்துமாய்
மூன்று மூர்த்தியாகி மூன்று மூன்று மூன்று மூன்றுமாய்
தோன்று சோதி மூன்றுமாய்த் துளக்கமில் விளக்கமாய்
ஏன்றெனாவியுள் புகுந்தது என்கொலோ? எம்மீசனே! 4

நின்றியங்கும் ஒன்றலா உருக்கள்தோறும் ஆவியாய்
ஒன்றிஉள் கலந்துநின்ற நின்னதன்மை இன்னதென்று
என்றும்யார்க்கும் எண்ணிறந்த ஆதியாய்! நின்னுந்திவாய்
அன்றுநான் முகற்பயந்த ஆதிதேவ னல்லையோ? 5

ஆதியான வானவர்க்கும் அண்டமாய அப்புறத்து
ஆதியான வானவர்க்கும் ஆதியான ஆதி நீ
ஆதியான வானவாணர் அந்தகாலம் நீ உரைத்தி
ஆதியானகாலம் நின்னை யாவர்காண வல்லரே! 6

தூய்மையோகமாயினுய்! துழாயலங்கல் மாலையாய்!
ஆமையாகி ஆழ்கடல் துயின்ற ஆதிதேவ நின்
நாமதேயம் இன்னதென்ன வல்லமல்ல வாகிலும்
சாமவேதகீதனுய சக்ரபாணியல்லயோ? 7

அடானுராகம் - ஆதிதாளம்

அரங்கனே! தரங்கநீர் கலங்க அன்று, குன்றுசூழ்
மரங்கள் தேயமாநிலம் குலுங்க மாசுணம் சுலாய்
நெருங்க, நீகடைந்தபோது நின்ற சூரர் என்செய்தார்?
குரங்கையாளுகந்த எந்தை! கூறுதேறவேறிதே. 8

கங்கைநீர் பயந்த பாதபங்கயத்துஎம் அண்ணலே!
அங்கையாழி சங்குதண்டு வில்லும்வாளும் ஏந்தினுய்!
சிங்கமாய தேவதேவ! தேனுலாவு மென்மலர்
மங்கை மன்னிவாழுமார்ப! ஆழிமேனி மாயனே! 9

சாவேரிராகம் - திரிபுடைதாளம்

புன்புலவழியடைத்து அரக்கிலச்சினைசெய்து
நன்புலவழி திறந்து ஞானநற்சுடர் கொளீ இ
என்பிலெள்கி நெஞ்சுருகி உள்கனிந்தெழுந்தது ஓர்
அன்பிலன்றி ஆழியானை யாவர்காண வல்லரே? 10

சுருட்டிராகம் - திரிபுடைதாளம்

கடைந்து பாற்கடல் கிடந்துகாலநேமியைக் கடிந்து
உடைந்த வாலிதன் தனக்கு உதவ வந்து ராமனுய்
மிடைந்த ஏழ்மரங்களும் அடங்கவெய்து வேங்கடம்
அடைந்தமால பாதமே அடைந்து நாளும் உய்ம்மினே. 11

ஸ்ரீ திருமழிசைப்பிரான் திருவடிகளே சரணம்.

ஸ்ரீ ராம ஜெயம்

## ஸ்ரீ தொண்டரடிப்பொடியாழ்வார்
## அருளிச்செய்த

# திருப்பள்ளியெழுச்சி

## ஸ்ரீ ரங்கநாதனைத் துயிலுணர்த்துதல்

பூபாள ராகம் - அடதாளம்

கதிரவன் குணதிசைச் சிகரம் வந்தணைந்தான்
கனையிரு ளகன்றது காலையம் பொழுதாய்
மதுவிரிந் தொழுகின மாமல ரெல்லாம்
வானவ ரரசர்கள் வந்து வந்தீண்டி
எதிர்திசை நிறைந்தனர் இவரொடும் புகுந்த
இருங்களிற் றீட்டமும் பிடியொடு முரசும்
அதிர்தலில் அலைகடல் போன்றுளது எங்கும்
அரங்கத்தம்மா! பள்ளி யெழுந்தருளாயே. 1

கொழுங்கொடி முல்லையின் கொழுமல ரணவிக்
கூர்ந்தது குணதிசை மாருதம் இதுவோ
எழுந்தன மலரணைப் பள்ளிகொள் ளன்னம்
ஈன்பனி நனைந்த தமிருஞ் சிறகுதறி
விழுங்கிய முதலையின் பிலம்புரை பேழ்வாய்
வெள்ளெயிறுற அதன் விடத்தினுக் கனுங்கி
அழுங்கிய ஆனையி னருந்துயர் கெடுத்த
அரங்கத்தம்மா! பள்ளி யெழுந்தருளாயே. 2

சுடரொழி பரந்தன சூழ்திசை யெல்லாம்
துன்னியதாரகை மின்னொளி சுருங்கி
படரொளி பசுத்தனன் பனிமதி இவனோ
பாயிருள கன்றது, பைம்பொழிற் கமுகின்
மடலிடைக்கீறி வண்பாளைகள் நாற
வைகறை கூர்ந்தது மாருதம் இதுவோ
அடலொளிதிகழ் தருதிகிரியந்தடக்கை
அரங்கத்தம்மா! பள்ளியெழுந்தருளாயே. 3

மேட்டிளமேதிகள் தளைவிடும் ஆயர்கள்
வேய்ங்குழலோசையும் விடைமணிக்குரலும்
ஈட்டிய இசைதிசை பரந்தன வயலுள்
இரிந்தன சுரும்பினம் இலங்கையர் குலத்தை
வாட்டிய வரிசிலை வானவரேறே!
மாமுனிவேள் வியைக்காத்து அவபிரதம்
ஆட்டிய அடுதிறலயோத்தி யெம்மரசே!
அரங்கத்தம்மா!பள்ளியெழுந்தருளாயே. 4

புலம்பின்புட்களும் பூம்பொழில்களின்வாய்,
போயிற்றுக்கங்குல் புகுந்தது புலரி
கலந்தது குணதிசைக் கனைகடலரவம்
களிவண்டு மிழற்றிய கலம்பகம் புனைந்த
அலங்கலந் தொடையல் கொண்டுஅடியினை பணிவான்
அமரர்கள் புகுந்தனர் ஆதலில்அம்மா!
இலங்கையர் கோன்வழிபாடு செய்கோயில்
எம்பெருமான்! பள்ளியெழுந்தருளாயே. 5

இரவியர் மணிநெடுந்தேரோடும் இவரோ
இறையவர் பதினொரு விடையரும் இவரே
மருவியமயிலினனறு முகன் இவனே
மருதரும் வசுக்களும் வந்து வந்தீண்டி
புரவியோடு ஆடலும் பாடலும் தேரும்
குமரதண்டம் புகுந் தீண்டிய வெள்ளம்
அருவரையனைய நின்கோயில் முன் இவரோ
அரங்கத்தம்மா! பள்ளியெழுந்தருளாயே. 6

அந்தரத்தமரர்கள் கூட்டங்கள் இவையோ
அருந்தவமுனிவரும் மருதரும் இவரோ
இந்திரனானையும் தானும் வந்திவனே
எம்பெருமான் உன்கோயிலின் வாசல்
சுந்தரர் நெருக்க விச்சாதரர் நூக்க
இயக்கரும் மயங்கினர் திருவடித் தொழுவான்
அந்தரம் பாரிடமில்லை மற்றிதுவோ
அரங்கத்தம்மா! பள்ளியெழுந்தருளாயே. 7

வம்பவிழ்வானவர் வாயுறை வழங்க
மாநிதிகபிலை ஒண்கண்ணாடி முதலா
எம்பெருமான்படி மக்கலங்காண்டற்கு
ஏற்பனவாயின கொண்டு நன்முனிவர்
தும்புரு நாரதர் புகுந்தனர் இவரோ
தோன்றினன் இரவியும் துலங்கொளிபரப்பி
அம்பரதலத்தினின்று அகல்கின்றது இருள்போய்
அரங்கத்தம்மா! பள்ளியெழுந்தருளாயே. 8

ஏதமில் தண்ணுமை எக்கம் மத்தளி
யாழ்குழல் முழவமோடு இசைதிசைகெழுமி
கீதங்கள் பாடினர் கின்னரர் கெருடர்கள்
கந்தருவரவர் கங்குலுலெல்லாம்
மாதவர் வானவர் சாரணர் இயக்கர்
சித்தரும் மயங்கினர் திருவடித்தொழுவான்
ஆதலில் அவர்க்கு நாளோலக்கம் அருள
அரங்கத்தம்மா!பள்ளியெழுந்தருளாயே. 9

கடிமலர்க்கமலங்கள் மலர்ந்தன இவையோ
கதிரவன் கனைகடல் முளைத்தனன் இவனோ
துடியிடையார் சுரிகுழல் பிழிந்துதறித்
துகிலுடுத்தேறினர் சூழ்புனலரங்கா!
தொடையொத்த துவளமும் கூடையும் பொலிந்து
தோன்றியதோள் தொண்டரடிப்பொடியென்னும்
அடியனை அளியனென்றருளிஉன்னடியார்க்கு
ஆட்படுத்தாய்! பள்ளியெழுந்தருளாயே. 10

ஸ்ரீ தொண்டரடிப் பொடியாழ்வார் திருவடிகளே சரணம்

ஸ்ரீ ராம ஜெயம்

## ஸ்ரீ திருப்பாணாழ்வார் அருளிச் செய்த

# அமலனாதிபிரான்

## அழகிய மணவாளனது திருமேனியழகில் பாதாதி கேசாந்தமாக ஈடுபடுத்தல்

யமுனாகல்யாணி ராகம் - திரிபுடைதாளம்

அமலனாதிபிரான் அடியார்க்கு என்னையாட்படுத்த
விமலன் விண்ணவர் கோன் விரையார் பொழில்வேங்கடவன
நிமலன் நின்மலன் நீதிவானவன் நீள்மதிளரங்கத் தானதிருக்
கமலபாதம் வந்து என்கண்ணிலுள்ளன வொக்கின்றதே. 1

உவந்தவுள்ளத்தனாய் உலகமளந்து அண்டமுற
நிவந்த நீள்முடியன் அன்றுசேர்ந்த நிசாசரரை
கவர்ந்த வெங்கணைக் காகுத்தன் கடியார் பொழிலரங்கத்தம்மான் அரைச்
சிவந்த ஆடையின் மேல் சென்றதாம் என் சிந்தனையே. 2

மந்திபாய் வடவேங்கடமாமலை வானவர்கள்
சந்தி செய்ய நின்றான் அரங்கத் தரவினணையான்
அந்திபோல் நிறத்தாடையும்அதன் மேலயனைப்படைத்ததோரெழில்
உந்தி மேலதன்றோ அடியேனுள்ளத்தின்னுயிரே. 3

சதுரமாமதிள்சூழ் இலங்கைக்கிறைவன் தலைபத்து
உதிரவோட்டி ஓர் வெங்கணையுய்த்தவன் ஓதவண்ணன்
மதுரமாவண்டுபாட மாமயிலாடரங்கத்தம்மான் திருவயிற்று
உதரபந்தனம் என்னுள்ளத்துள் நின்றுஉலாகின்றதே. 4

பாரமாய பழவினைப்பற்றறுத்து என்னைத்தன்
வாரமாக்கிவைத்தான் வைத்ததன்றி என்னுள் புகுந்தான்
கோரமாதவம்செய்தனன்கொல் அறியேன் அடலரங்கத்தம்மான்திரு
வாரமார்பதன்றோ அடியேனை ஆட்கொண்டதே. 5

துண்டவெண்பிறையன் துயர்தீர்த்தவன் அஞ்சிறைய
வண்டுவாழ் பொழில்சூழ் அரங்கநகர்மேய அப்பன்
அண்டரண்ட பகிரண்டத்து ஒருமாநிலம் எழுமால்வரைமுற்றும்
உண்டகண்டம் கண்டீர் அடியேனை உய்யக்கொண்டதே. 6

கையினார் சுரிசங்கனலாழியர் நீள்வரைபோல்
மெய்யனார் துளபவிரையார் கமழ்நீண்முடிஎம்
ஐயனார் அணியரங்கனார் அரவினணைமிசை மேயமாயனார்
செய்யவாய் ஐயோ! என்னைச் சிந்தை கவர்ந்ததுவே. 7

பரியனாகிவந்த அவுணனுடல்கீண்ட அமரர்க்கு
அரிய ஆதிப்பிரான் அரங்கத்தமலன் முகத்து
கரியவாகிப் புடைபரந்து மிளிர்ந்து செவ்வரியோடி நீண்ட அப்
பெரியவாயகண்கள் என்னைப் பேதைமை செய்தனவே. 8

ஆலமாமரத்தினிலைமேல் ஒரு பாலகனாய்
ஞாலமேழும் உண்டான் அரங்கத்தரவினணையான்
கோலமாமணியாரமும் முத்துத்தாமமும் முடிவில்லதோ ரெழில்
நீலமேனி ஐயோ! நிறை கொண்டது என் நெஞ்சினையே. 9

கொண்டல் வண்ணனைக் கோவலனாய் வெண்ணை
யுண்டவாயன் என்னுள்ளம் கவர்ந்தானை
அண்டர்கோன் அணியரங்கன் என்னமுதனைக்
கண்டகண்கள் மற்றொன்றினைக் காணாவே. 10

ஸ்ரீ திருப்பாணாழ்வார் திருவடிகளே சரணம்.

ஸ்ரீ ராம ஜெயம்

## ஸ்ரீ மதுரகவியாழ்வார் அருளிச்செய்த

# கண்ணிநுண் சிறுத்தாம்பு

ஆரபிராகம் - ஆதிதாளம்

கண்ணிநுண் சிறுத்தாம்பினுல் கட்டுண்ணப்
பண்ணிய பெருமாயன் என்னப்பனில்
நண்ணித் தென்குருகூர் நம்பியென்றக்கால்
அண்ணிக்கும் அமுதூறும் என்னுவுக்கே. 1

நாவினுல் நவிற்று இன்ப மெய்தினேன்
மேவினேன் அவன் பொன்னடி மெய்மையே
தேவுமற்றறியேன் குருகூர்நம்பி
பாவினின்னிசை பாடித்திரிவனே. 2

திரிதந்தாகிலும் தேவபிரானுடை
கரிய கோலத் திருவுருகாணபன் நான்
பெரியவண்குருகூர் நகார்நம்பிக்கு ஆள்
உரியனுய் அடியேன் பெற்ற நன்மையே. 3

நன்மையால் மிக்க நான்மறையாளர்கள்
புன்மையாகக் கருதுவராதலின
அன்னையாய் அத்தனுய் என்னையாண்டிடும்
தன்மையான் சடகோபன் என்நம்பியே. 4

நம்பினேன் பிறர் நன்பொருள் தன்னையும்
நம்பினேன் மடவாரையும் முன்னெலாம்
செம்பொன்மாடத் திருக்குருகூர்நம்பிக்கு
அன்பனுய் அடியேன் சதிர்த்தேன் இன்றே. 5

இன்றுதொட்டும் எழுமையும் எம்பிரான்
நின்று தன்புகழ் ஏத்த அருளினுன்
குன்றமாடத் திருக்குருகூர் நம்பி
என்றும் என்னை இகழ்விலன் காண்மினே. 6

கண்டுகொண்டு என்னைக் காரிமாறப்பிரான்
பண்டை வல்வினை மாற்றி யருளினுன்
எண்திசையும் அறிய இயம்புகேன்
ஒண்தமிழ்ச் சடகோப னருளையே. 7

அருள் கொண்டாடும் அடியவர் இன்புற
அருளினுன் அவ்வருமறையின் பொருள்
அருள்கொண்டு ஆயிரம் இன்தமிழ்பாடினுன்
அருள்கண்டீர் இவ்வுலகினில் மிக்கதே. 8

மிக்கவேதியர் வேதத்தி னுட் பொருள்
நிற்கப் பாடி என்நெஞ்சுள் நிறுத்தினுன்
தக்கசீர்ச் சடகோபன் என் நம்பிக்கு ஆள்
புக்ககாதல் அடிமைப் பயனன்றே. 9

பயனன்ருகிலும் பாங்கல்லா ராகிலும்
செயல்நன்ருகத் திருத்திப் பணிகொள்வான்
குயில்நின்ருர் பொழில்சூழ் குருகூர்நம்பி
முயல்கின்றேன் உன்நன் மொய்கழற்கன்பையே. 10

அன்பன் தன்னை அடைந்தவர்கட் கெல்லாம்
அனபன் தென்குருகூர் நகர் நம்பிக்கு
அன்பனுய் மதுரகவி சொன்ன சொல்
நம்புவார்பதி வைகுந்தம் காண்மினே. 11

ஸ்ரீ மதுரகவியாழ்வார் திருவடிகளே சரணம்

ஸ்ரீ ராம ஜெயம்

## ஸ்ரீ திருமங்கையாழ்வார்
## அருளிச்செய்த
# பெரிய திருமொழி

சங்கராபரணராகம் - திரிபுடைதாளம்

வாடினேன்வாடி வருந்தினேன் மனத்தால்
பெருந்துயரிடும்பையில் பிறந்து
கூடினேன்கூடி இளையவர் தம்மோடு
அவர்தரும் கலவியே கருதி
ஓடினேன் ஓடி உய்வதோர் பொருளால்
உணர்வெனும் பெரும்பதம் தெரிந்து
நாடினேன் நாடி நான்கண்டு கொண்டேன்
நாராயணா என்னும் நாமம். 1

ஆவியே! அமுதே! என நினைந்துருகி
அவரவர் பணைமுலை துணையாய்
பாவியேனுணராது எத்தனை பகலும்
பழுது போயொழிந்தன நாள்கள்
தூவிசேர் அன்னம் துணையொடும் புணரும்
சூழ்புனற்குடந்தையே தொழுது என்
நாவினுலுய்ய நான் கண்டுகொண்டேன்
நாராயணா என்னும் நாமம். 2

சேமமே வேண்டித் தீவினை பெருக்கித்
தெரிவைமார் உருவமே மருவி
ஊமனர் கண்ட கனவிலும் பழுதாய்
ஒழிந்தன கழிந்த அந்நாள்கள்
காமனர்தாதை நம்முடை யடிகள்
தம்மடைந்தார் மனத்திருப்பார்
நாமம் நானுய்ய நான் கண்டுகொண்டேன்
நாராயணா என்னும் நாமம். 3

வென்றியே வேண்டி வீழ் பொருட்கிரங்கி
　　வேற்கணார் கலவியே கருதி
நின்றவா நில்லா நெஞ்சினையுடையேன்
　　என்செய்வேன்? நெடும் விசும் பணவும்
பன்றியாய் அன்று பாரகங் கீண்ட
　　பாழியா ஞழியா னருளே
நன்று நானுய்ய நான் கண்டுகொண்டேன்
　　**நாராயண** என்னும் நாமம். 4

கள்வனே ஞனேன் படிறுசெய்திருப்பேன்
　　கண்டவாதிரிதந்தே னேலும்
தெள்ளியே ஞனேன் செல்கதிக்கு அமைந்தேன்
　　சிக்கெனத் திருவருள் பெற்றேன்
உள்ளெலாம் உருகி குரல் தழுத்தொழிந்தேன்
　　உடம்பெல்லாம் கண்ணநீர் சோர
நள்ளிருளளவும் பகலும் நானழைப்பன்
　　**நாராயண** என்னும் நாமம். 5

எம்பிரான் எந்தை என்னுடைச் சுற்றம்
　　எனக்கரசு என்னுடை வாழ்நாள்
அம்பினால் அரக்கர் வெருக்கொள நெருக்கி
　　அவருயிர் செகுத்த எம் அண்ணல்
வம்புலாம் சோலை மாமதிள் தஞ்சை
　　மாமணிக் கோவிலே வணங்கி
நம்பிகாள்! உய்ய நான் கண்டுகொண்டேன்
　　**நாராயண** என்னும் நாமம். 6

இப்பிறப் பறியீர் இவர் அவர் ரென்னீர்
　　இன்னதோர் தன்மை என்று உணரீர்
கற்பகம் புலவர்களை கணென்று உலகில்
　　கண்டவா தொண்டரைப் பாடும்
சொற்பொருள் ஆழீர் சொல்லுகேன் வம்மின்
　　சூழ்புனற் குடந்தையே தொழுமின்
நற்பொருள் காண்மின் பாடிநீருய்மின்
　　**நாராயண** என்னும் நாமம். 7

கற்றிலேன் கலைகள் ஐம்புலன் கருதும்
கருத்துளே திருத்தினேன் மனத்தை
பெற்றிலேன் அதனால் பேதையேன் நன்மை
பெருநிலத் தாருயிர்க் கெல்லாம்
செற்றமே வேண்டித் திரிதர்வேன் தவிர்ந்தேன்
செல்கதிக்கு உய்யுமாறு எண்ணி
நல்துணையாகப் பற்றினேன் அடியேன்
நாராயணா என்னும் நாமம். 8

குலம் தரும் செல்வம் தந்திடும்
அடியார் படுதுயராயின வெல்லாம்
நிலந்தரஞ் செய்யும் நீள்விசும் பருளும்
அருளொடு பெருநிலம் அழிக்கும்
வலந்தரும் மற்றும் தந்திடும்
பெற்றதாயினும் ஆயின செய்யும்
நலம் தருஞ் சொல்லை நான் கண்டுகொண்டேன்
நாராயணா என்னும் நாமம். 9

மஞ்சுலாம் சோலை வண்டறை மாநீர்
மங்கையார் வாள் கலி கன்றி
செஞ்சொலா லெடுத்த தெய்வ நல்மாலை
இவை கொண்டு சிக்கெனத் தொண்டீர்!
துஞ்சும் போது அழைமின் துயர் வரில் நினைமின்
துயரிலீர் சொல்லினும் நன்றாம்
நஞ்சுதான் கண்டீர் நம்முடை வினைக்கு
நாராயணா என்னும் நாமம். 10

ஸ்ரீ திருமங்கையாழ்வார் திருவடிகளே சரணம்

ஸ்ரீ ராம ஜெயம்

## ஸ்ரீ பொய்கையாழ்வார்

## அருளிச் செய்த இயற்பா

# முதல் திருவந்தாதி

ஸஹானாராகம் - திரிபுடைதாளம்

வையகம் தகளியா வார்கடலே நெய்யாக
வெய்யகதிரோன் விளக்காக - செய்ய
சுடராழியானடிக்கே சூட்டினேன் சொல்மாலை
இடராழி நீங்குகவே யென்று. 1

மண்ணும் மலையும் மறிகடலும் மாருதமும்
விண்ணும் விழுங்கியது மெய்யென்பர் - எண்ணில்
அலகளவு கண்ட சீராழியாய்க்கு அன்று இவ்
வுலகளவும் உண்டோ? உன்வாய். 2

அடியும் படிகடப்பத் தோள் திசைமேல் செல்ல
முடியும் விசும்பளந்த தென்பர்-வடியுகிரால்
ஈர்ந்தான் இரணியனதாகம் இருஞ்சிறைப்புள்
ஊர்ந்தான் உலகளந்த நான்று. 3

இமையாத கண்ணால் இருளகல நோக்கி
அமையாப் பொறிபுலன்களைந்தும் - நமையாமல்
ஆகத்தணைப்பார் அணைவரே ஆயிரவாய்
நாகத் தணையான் நகர்.

ஆறிய வன்பில் அடியார் தமரர்வந்தால்
கூறிய குற்றமாக் கொள்ளல்நீ - தேறி
வெடியோய்! அடி அடைதற்கன்றே ஈரைந்து
முடியான் படைத்தமுரண். 5

குன்றனைய குற்றம் செய்யினும் குணங் கொள்ளும்
இன்று முதலாக என்னெஞ்சே! - என்றும்
புறனுரையே யாயினும் பொன்னாழிக்கையான்
திறனுரையே சிந்தித்திரு. 6

சென்றால் குடையாம் இருந்தால் சிங்காசனமாம்
நின்றால் மரவடியாம் நீள்கடலுள் - என்றும்
புணையாம் மணிவிளக்காம் பூம்பட்டால் புல்கும்
அணையாம் திருமாற்கு அரவு. 7

காப்பு உன்னையுன்னக் கழியும் அருவினைகள்
ஆப்பு உன்னையுன்ன அவிழ்ந்தொழியும் - மூப்பு உன்னை
சிந்திப்பார்க்கில்லை திருமாலே! நின்னடியை
வந்திப்பார் காண்பார் வழி. 8

வழிநின்று நின்னை தொழுவார் வழுவா
மொழிநின்ற மூர்த்தியரே ஆவர் - பழுதொன்றும்
வாராத வண்ணமே விண்கொடுக்கும் மண்ணளந்த
சீரான் திருவேங்கடம். 9

உளன்கண்டாய் நன்னெஞ்சே! உத்தமனென்னும்
உளன்கண்டார் உள்ளுவா ருள்ளத்து உளன்கண்டாய்
வெள்ளத்தினுள்ளானும் வேங்கடத்து மேயானும்
உள்ளத்தினுள்ளானென்று ஓர். 10

ஸ்ரீ திருப்பொய்கையாழ்வார் திருவடிகளே சரணம்.

| |
|---|
| இப்பாசுரத்தின் மூலமாக பகவானைக் காண்பதற்காக, உலகத்தையே விளக்காகவும், கடலையே எண்ணையாகவும், சூரியனைத் திரியாகவும் வைத்து விளக்கேற்றுகிறார், முதல் ஆழ்வாராகிய ஸ்ரீ பொய்கையாழ்வார். இது பகவானுக்கு தீபாராதனை காட்டும் போது ஓதுவதற்குரிய பாசுரமாகும். |

ஸ்ரீ ராம ஜெயம்

## ஸ்ரீ பூதத்தாழ்வார்
## அருளிச் செய்த இயற்பா

# இரண்டாந் திருவந்தாதி

அன்பே தகளியாய் ஆர்வமே நெய்யாக
இன்புருகு சிந்தை இடுதிரியாய் - நன்புருகி
ஞானச்சுடர் விளக்கேற்றினேன், நாரணற்கு
ஞானத்தமிழ் புரிந்த நான். 1

தாமுளரே தம்முள்ள முள்ளுளதே தாமரையின்
பூவுளதே ஏத்தும் பொழுதுண்டே - வாமன்
திருமருவு தாள்மருவு சென்னியரே செவ்வே
அருநரகம் சேர்வதரிது. 2

சிறந்தார்க் கெழுதுணையாம் செங்கண்மால் நாமம்
மறந்தாரை மானிடமாவையேன் - அறந்தாங்கும்
மாதவனே! என்னும் மனம்படைத்து மற்றவன்பேர்
ஓதுவதே நாவினுல் உள்ளு. 3

எமக்கென்று இருநிதியம் எமாந்திராதே
தமக்கென்றும் சார்வமறிந்து - நமக்கென்றும்
மாதவனே என்னும் மனம் படைத்து மற்றவன்பேர்
ஓதுவதே நாவினுல் லோத்து. 4

ஓத்தின் பொருள் முடிவும் இத்தனையே உத்தமன் பேர்
ஏத்தும் திறமறிமின் ஏழைகாள்! ஓத்ததனை
வல்லீரேல் நன்று அதனை மாட்டீரேல் மாதவன்பேர்
சொல்லுவதே ஓத்தின் சுருக்கு. 5

நின்றதோர் பாதம் நிலம்புதைப்ப நீண்டதோள்
சென்றளந்த தென்பர் திசையெல்லாம் - அன்று
கருமாணியாய் இரத்த கள்வனே! உன்னைப்
பிரமாணித்தார் பெற்றந் பேறு. 6

மண்ணுலகம் ஆளேனே? வானவர்க்கும் வானவனாய்
விண்ணுலகந் தன்னகத்து மேவேனே? - நண்ணித்
திருமாலைச் செங்கண் நெடியானை எங்கள்
பெருமானைக் கைதொழுத பின். 7

பின்னால் அருநகரம் சேராமல், பேதுறுவீர்
முன்னால் வணங்க முயன்மினோ - பல்நூல்
அளந்தானைக் கார்க்கடல் சூழ் ஞாலத்தை எல்லாம்
அளந்தானவன் சேவடி. 8

கொண்டுவளர்க்கக் குழவியாய்த் தான்வளர்ந்தது
உண்டது உலகேழும் உள்ளொடுங்க - கொண்டு
குடமாடிக் கோவலனாய் மேவி என்னெஞ்சம்
இடமாகக் கொண்ட இறை. 9

மாலே! நெடியோனே! கண்ணனே! விண்ணவர்க்கு
மேலா! வியன்துழாய்க் கண்ணியனே! - மேலால்
விளவின் காய் கன்றினால் வீழ்த்தவனே! என்தன்
அளவன்றால் யானுடைய அன்பு. 10

ஸ்ரீ பூதத்தாழ்வார் திருவடிகளே சரணம்.

முன்னையவர் உலகத்தை விளக்காக்க, இரண்டாமவர் தன்னுள்ளேயே விளக்கேற்றுகிறார். அன்பை விளக்காகவும், ஆர்வத்தை நெய்யாகவும், உருகுகின்ற மனதை திரியாகவும் வைத்து, உள்ளே ஒளிபெருக விளக்கேற்றுகிறார்.

ஸ்ரீ ராம ஜெயம்

ஸ்ரீ பேயாழ்வார் அருளிச்செய்த

இயற்பா

# மூன்றாந் திருவந்தாதி

மோகனராகம் - திரிபுடைதாளம்

திருக்கண்டேன் பொன்மேனி கண்டேன் திகழும்
அருக்கன் அணிநிறமும் கண்டேன் செருக்கிளரும்
பொன்னாழி கண்டேன்புரிசங்கம் கைக்கண்டேன்
என்னாழி வண்ணன்பால் இன்று. 1

மருந்தும் பொருளும் அமுதமும் தானே
திருந்திய செங்கண்மாலாங்கே - பொருந்திய
நின்றுலக முண்டுமிழ்ந்தும் நீரேற்றும் மூவடியால்
அன்றுலந் தாயோனடி. 2

தேசும் திறலும் திருவும் உருவமும்
மாசில் குடிப்பிறப்பும் மற்றவையும் - பேசில்
வலம்புரிந்த வான்சங்கம் கொண்டான் பேரோத
நலம்புரிந்து சென்றடையும் நன்கு. 3

ஆரேதுயருழந்தார்? துன்புற்றாராண்டையார்
காரேமலிந்த கருங்கடலை - நேரே
கடைந்தானைக் காரணனை நீரணைமேல்பள்ளி
அடைந்தானை நாளுமடைந்து. 4

பொருப்பிடையே நின்றும் புனல் குளித்தும் ஐந்து
நெருப்பிடையே நிற்கவும் நீர்வேண்டா - விருப்புடைய
வெஃகாவே சேர்ந்தானை மெய்ம்மலா தூய்க்கை தொழுதால்
அஃகாவே தீவினைகளாய்ந்து. 5

நெஞ்சால் நினைப்பிரியனேலும் நிலைபெற்றுஎன்
நெஞ்சமே! பேசாய் நினைக்குங்கால் - நெஞ்சத்துப்
பேராதுநிற்கும் பெருமானை என்கொலோ?
ஓராது நிற்பது உணர்வு. 6

கவியினற் கைபுனைந்து கண்ணார் கழல்போய்
செவியினல் கேள்வியராய்ச் சேர்ந்தார் - புவியினல்
போற்றியுரைக்கப் பொலியுமே? பின்னைக்கா
ஏற்றுயிரை யட்டா னெழில். 7

அதுநன்று இதுதீதென்று ஐயப்படாதே
மதுநின்ற தண்துழாய் மார்வன் - பொதுநின்ற
பொன்னங் கழலே தொழுமின் முழுவினைகள்
முன்னம் கழலும் முடிந்து. 8

உய்த்துணர்வென்னும் ஒளிகொள்விளக்கேற்றி
வைத்தவனைநாடி வலைப்படுத்தேன் - மெத்தெனவே
நின்ருன் இருந்தான் கிடந்தான் என்னெஞ்சத்து
பொன்ருமை மாயன் புகுந்து. 9

இமம் சூழ்மலையும் இருவிசும்பும் காற்றும்
அமஞ்சூழ்ந்தற விளங்கித் தோன்றும் - நமன்சூழ்
நரகத்து நம்மை நணுகாமல் காப்பான்
துரகத்தை வாய் பிளந்தான் தொட்டு. 10

ஸ்ரீ திருப்பேயாழ்வார் திருவடிகளே சரணம்

முதல் இருவரும் விளக்கேற்ற, அக ஒளியிலும் புறஒளியிலும் பகவானைப் பிரத்யட்சமாகக் காண்கிருர் பெருமைக்குரிய ஸ்ரீ பேயாழ்வார். இதனல் இம் முதல் மூவர்களும் சிறப்புப் பெறுகின்றனர்.

ஸ்ரீ ராம ஜெயம்

## ஸ்ரீ நம்மாழ்வார் அருளிச்செய்த

# திருவாய்மொழி

## 1ம் திருவாய்மொழி

கமாஸ்ராகம் - ஆதிதாளம்

உயர்வறவுயர் நலம் உடையவன் யவனவன்
மறர்வற மதிநலம் அருளினன் யவனவன்
அயர்வறு மமரர்கள் அதிபதி யவனவன்
துயரறு சுடரடி தொழுதெழு என்மனனே! 1

மனனகமலமற மலர்மிசை யெழுதரும்
மனனுணர் வளவிலன் பொறியுணர் வவையிலன்
இனனுணர் முழுநலம் எதிர்நிகழ் கழிவினும்
இனனிலனெனனுயிர் மிகுநரையிலனே. 2

இலனது உடையனிது எனநினைவரியவன்
நிலனிடை விசும்பிடை உருவினன் அருவினன்
புலனொடு புலனலன் ஒழிவிலன் பரந்த அந்
நலனுடையொருவனை நணுகினம்நாமே. 3

நாமவனிவனுவன் அவளிவளுவ ளெவள்
தாமவரிவருவர் அதுவிதுவுது வெது
வீமவையிவையுவை அவை நலம் தீங்கவை
ஆமவையாயவை ஆய்நின்ற அவரே. 4

அவரவர் தமதமது அறிவறி வகைவகை
அவரவர் இறையவர் என அடியடைவர்கள்
அவரவர் இறையவர் குறைவிலர் இறையவர்
அவரவர் விதிவழி அடைய நின்றனரே. 5

நின்றனர் இருந்தனர் கிடந்தனர் திரிந்தனர்
நின்றிலர் இருந்திலர் கிடந்திலர் திரிந்திலர்

என்று மொரியல்வினர் எனநினை வரியவர்
என்று மொரியல்வொடு நின்ற வெந்திடரே. 6

திடவிசும் பெரிவளி நீர்நிலம் இவைமிசை
படர்பொருள் முழுவதுமாய் அவையவைதொறும்
உடல்மிசை எயிரெனக் கரந்துஎங்கும் பரந்துளன்
சுடர்மிகு சுருதியுள் இவையுண்ட சுரனே. 7

சுரரறிவருநிலை விண்முதல் முழுவதும்
வரன் முதலாயவை முழுதுண்ட பரபரன்
புரமொரு மூன்றெரித்து அமரர்க்கும் அறிவியந்து
அரனயனென உலகழித்தமைத்துளனே. 8

உளனெனில் உளன் அவனருவம் இவ்வுருவுகள்
உளனலனெனில் அவனுருவம் இவ்வுருவுகள்
உளனென இலனென இவை குணமுடைமையில்
உளனிரு தகைமையொடு ஒழிவிலன் பரந்தே. 9

பரந்ததண் பரவையுள் நீர்தொறும் பரந்துளன்
பரந்த அண்டமிதென நிலவிசும் பொழிவற
கரந்த சிலிடந்தொறும் இடம்திகழ் பொருள் தொறும்
கரந்தெங்கும் பரந்துளன் இவையுண்டகரனே. 10

கரவிசும் பெரிவளி நீர்நில மிவைமிசை
வரனவில் திறல்வலி அளிபொறையாய்நின்ற
பரனடிமேல் குருகூர்ச் சடகோபன்சொல்
நிரனிறையாயிரத்து இவைபத்தும் வீடே. 11

ஸ்ரீ ஆழ்வார் திருவடிகளே சரணம்.

உயர்வே பரன்படியை உள்ளதெல்லாம் தான்கண்டு
உயர்வேதம் நேர்கொண்டுரைத்து - மயர்வேதும்
வாராமல் மானிடரை வாழ்விக்கும் மாறன்சொல்
வேராகவே விளையும் வீடு.

ஸ்ரீ ஜீயர் திருவடிகளே சரணம்.

ஸ்ரீ ராம ஜெயம்

# ஸ்ரீ நம்மாழ்வார் அருளிச்செய்த
# 10ம் திருவாய் மொழி

நாதநாமக்கிரியைராகம் - ஆதிதாளம்

உலகமுண்ட பெருவாயா! உலப்பில் கீர்த்தியம்மானே!
நிலவும் சுடர்சூழொளி மூர்த்தி! நெடியாய்! அடியேனுருயிரே!
திலதமுலகுக்காய் நின்றதிருவேங்கடத்து எம்பெருமானே!
குலதொல்லடியேன் உன்பாதம் கூடுமாறு கூருயே. 1

கூறாய் நீறாய் நிலஞகிக் கொடுவல்லசுரர்குலமெல்லாம்
சீறாஎறியும் திருனேமிவலவா! தெய்வக் கோமானே!
சோர் சுனைத்தாமரை செந்தீமலரும் திருவேங்கடத்தானே!
ஆருவன் பிலடியேன் உன்னடி சேர்வண்ணம் அருளாயே. 2

வண்ணமருள் கொளணி மேக வண்ணு! மாயவர் மானே!
எண்ணம் புகுந்து தித்திக்கும் அமுதே! இமையோர் அதிபதியே!
தெண்ணலருவி மணிபொன் முத்தலைக்கும் திருவேங்
கடத்தானே
அண்ணலே! உன்னடி சேர அடியேற்க்கு ஆவாவென்னாயே. 3

ஆவா! என்னாது உலகத்தை அலைக்கும் அசுரர் வாணாள்மேல்
தீவாய் வாளி மழைபொழிந்த சிலையா! திருமாமகள் கேள்வா!
தேவா! சுரர்கள் முனிக்கணங்கள் விரும்பும் திருவேங்கடத்தானே!
பூவார் கழல்கள் அருவினையேன் பொருந்துமாறு புணராயே. 4

புணரா நின்ற மரமேழ் அன்றெய்த ஒரு வில் வலவாவோ!
புணரேய் நின்ற மரமிரண்டின் நடுவே போன முதல்வாவோ!
திணரார் மேகமெனக் களிறு சேரும் திருவேங்கடத்தானே!
திணரார் சாரங்கத்து உன்பாதம் சேர்வதடியே என் நாளே? 5

எந்நாளே? நாம் மண்ணளந்த இணைத்தாமரைகள் காண்பதற்
கென்று
எந்நாளும் நின்று இமையோர்களேத்தி இறைஞ்சி இனமினமாய்
மெய்ந்நா மனத்தால் வழிபாடு செய்யும் திருவேங்கடத்தானே?
மெய்ந்நானெய்தி எந்நாள் உன்னடிக்கண் அடியேன் மேவுவதே? 6

அடியேன் மேவியமர்கின்ற அமுதே! இமையோ திபதியே!
கொடியா வடு புள்ளுடையானே! கோலக்கனிவாய்ப் பெருமானே!
செடியார் வினைகள் தீர் மருந்தே! திருவேங்கடத்துஎம் பெருமானே!
நொடியார் பொழுதும் உன்பாதம் காணநோலாதாற்றேனே! 7

நோலாதாற்றேன் உன்பாதம் காணவென்றுநண்ணுணர்வின்
நீலார் கண்டத் தம்மானும் நிறைநான்முகனும் இந்திரனும்
சேலேய் கண்ணார் மலர்சூழ விரும்பும் திருவேங்கடத்தானே!
மாலாய் மயக்கி அடியேன் பால் வந்தாய் போலேவாராயே. 8

வந்தாய் போலே வாராதாய் வராதாய் போல் வருவானே!
செந்தாமரைக் கண் செங்கனிவாய் நால்தோளமுதே! எனதுயிரே!
சிந்தாமணிகள் பகரல்லைப் பகல் செய் திருவேங்கடத்தானே!
அந்தோ! அடியேன் உன் பாதம் அகலகில்லேன் இறையுமே. 9

அகலகில்லேன் இறையுமென்று அலர்மேல் மங்கையுறை மார்பா
நிகரில் புகழாய்! உலகம் மூன்றுடையாய் என்னை யாள்வானே!
நிகரில் அமரர் முனிக் கணங்கள் விரும்பும் திருவேங்கடத்தானே!
புகலொன்றில்லா அடியேன் உன்னடிக்கீழ் அமர்ந்து புகுந்தேனே. 10

அடிக்கீழமாந்து புகுந்து அடியீர்! வாழ்மினென்றென்றருள் கொடுக்கும்
படிக்கேழில்லாப் பெருமானைப் பழனக்குரு கூர்ச்சடகோபன்
முடிப்பான் சொன்ன ஆயிரத்துத் திருவேங்கடத்துக்கிவை பத்தும்
பிடித்தார் பிடித்தார் வீற்றிருந்து பெரியவானுள் நிலாவுவரே. 11

ஸ்ரீ ஆழ்வார் திருவடிகளே சரணம்.

உலகுய்யமால் நின்ற உயர் வேங்கடத்தே
அலர்மகளை முன்னிட்டு அவன்தன் - மலரடியே
வன்சரணாய் சேர்ந்த மகிழ்மாறன் தாளிணையே
உன்சரணாய் நெஞ்சமே! உள்

ஜீயர் திருவடிகளே சரணம்.

ஸ்ரீ ராம ஜெயம்

# ஸ்ரீ நம்மாழ்வார் அருளிச்செய்த

# 2-ம் திருவாய் மொழி

நீலாம்புரிராகம் - ஆதிதாளம்

கங்குலும் பகலும் கண்துயிலறியாள்
கண்ணநீர் கைகளால் இறைக்கும்
சங்கு சக்கரங்களென்று கைகூப்பும்
தாமரைக் கண்ணென்றே தளரும்
எங்ஙனே தரிக்கேன் உன்னை விட்டு என்னும்
இருநிலம் கைதுழா விருக்கும்
செங்கயல்பாய் நீர்த்திருவரங்கத்தாய்!
இவள் திறத்து என் செய்கின்ருயே? 1

என் செய்கின்ருய்? என்தாமரைக் கண்ணு!
என்னும் கண்ணீர் மல்க இருக்கும்
என்செய்கேன்? எறிநீர்த் திருவரங்கத்தாய்!
என்னும் வெவ்வுயிர்த்துயிர்த் துருகும்
முன்செய்த வினையே ! முகப்படா யென்னும்
முகில் வண்ணு! தகுவதோ? என்னும்
முன்செய்து இவ்வுலக முண்டுமிழ்ந் தளந்தாய்!
என்கொலோ முடிகின்றது இவட்கே? 2

வட்கிலள் இறையும் மணிவண்ணு! என்னும்
வானமே நோக்கும் மையாக்கும்
உட்குடைய சுரருயிரெல்லாம் முண்ட
ஒருவனே! என்னும் உள்ளுருகும்
கட்கிலீ! உன்னைக் காணுமாறு அருளாய்
காகுத்தா! கண்ணனே! என்னும்
திட்கொடி மதிள்சூழ் திருவரங்கத்தாய்!
இவள்திறத்து என் செய்திட்டாயே? 3

இட்டகாலிட்டகைகளாயி ருக்கும்
எழுந்துலாய் மயங்கும் கைகூப்பும்
கட்டமே காதலென்று மூர்ச்சிக்கும்
கடல்வண்ணா! கடியைகாணென்னும்
வட்டவாய் நேமிவலங்கையா! என்னும்
வந்திடா யென்றென்றே மயங்கும்
சிட்டனே! செழுநீர்த் திருவரங்கத்தாய்!
இவள் திறத்து என் சிந்தித்தாயே? 4

சிந்திக்கும் திசைக்கும் தேறும் கைகூப்பும்
திருவரங்கத்துள்ளாய்!என்னும்
வந்திக்கும் ஆங்கே மழைக்கண நீர்மல்க
வந்திடா யென்றென்றே மயங்கும்
அந்திப்போது அவுணனுடலிடந்தானே!
அலைகடல் கடைந்த ஆரமுதே!
சந்தித்து உன் சரணம் சார்வதேவலித்த
தையலை மையல் செய்தானே! 5

மையல் செய்து என்னை மனங்கவர்ந்தானே!
என்னும் மாமாயனே! என்னும்
செய்யவாய் மணியே! என்னும் தணபுனல்சூழ்
திருவரங்கத்துள்ளாய்! என்னும்
வெய்யவாள் தண்டுசெங்குசக்கரம் வில்லேந்தும்
விண்ணோர் முதல்! என்னும்
பைகொள் பாம்பணையாய்! இவள் திறத்தருளாய்
பாவியேன் செயற்பாலதுவே 6

பாலதுன்பங்க ளின்பங்கள் படைத்தாய்!
பற்றிலார் பற்ற நின்றானே!
காலச் சக்கரத்தாய்! கடலிடம் கொண்ட
கடல்வண்ணா! கண்ணனே! என்னும்
சேல்கொள் தண்புனல்சூழ் திருவரங்கத்தாய்!
என்னும் என்தீர்த்தனே! என்னும்
கோலமா மழைக்கண பனிமல்க இருக்கும்
என்னுடைக் கோமளக்கொழுந்தே. 7

கொழுந்துவானவர்கட்கு! என்னும் குன்றேந்தி
கோநிரை காத்தவன்? என்னும்
அழுந்தொழும் ஆவியனல வெவ்வுயிர்க்கும்
அஞ்சன வண்ணனே! என்னும்
எழுந்து மேல்நோக்கி இமைப்பிலளிருக்கும்
எங்ஙனே! நோக்குகேன்? என்னும்
செழுந்தடம் புனல்சூழ் திருவரங்கத்தாய்!
என்செய்கேன் என்திருமகட்கே? 8

என்திருமகள் சேர் மார்வனே! என்னும்
என்னுடையாவியே! என்னும்
நின்திரு வெயிற்றுல் இடந்து நீ கொண்ட
நிலமகள் கேள்வனே! என்னும்
அன்றுரு வேழும் தழுவி நீ கொண்ட
ஆய்மகளன்பனே! என்னும்
தென் திருவரங்கம் கோயில் கொண்டானே!
தெளிகிலேன் முடிவு இவள் தனக்கே. 9

முடிவு இவள் தனக்கு ஒன்றறிகிலேனென்னும்
மூவுலகாளியே! என்னும்
கடிகமழ் கொன்றைச் சடையனே! என்னும்
நான்முகக் கடவுளே! என்னும்
வடிவுடை மாேனர் தலைவனே! என்னும்
வண்திருவரங்கனே! என்னும்
அடியடையாதாள் போல் இவளணுகி
அடைந்தனள் முகில் வண்ணனடியே. 10

முகில் வண்ணனடியையடைந்து அருள்சூடி
உய்ந்தவன் மொய்புனல் பொருனல்
துகில்வண்ணத்தூநீர்ச் சேர்ப்பன் வண்பொழில் சூழ்
வண்குருகூர்ச் சடகோபன்
முகில் வண்ணனடிமேல் சொன்ன சொல்மாலை
ஆயிரத்து இப்பத்தும் வல்லார்
முகில் வண்ண வானத்து இமையவர் சூழ
இருப்பர் பேரின்ப வெள்ளத்தே. 11

ஸ்ரீ நம்மாழ்வார் திருவடிகளே சரணம்.

கங்குல் பகலாதி கைவிஞ்ர மோகமுற
அங்கதனைக் கண்டோ ரங்கரைப் பார்த்து - இங்கிவள்பால்
என்செய்ய நீரெண்ணுகின்றதென்னும் நிலைசேர்மாறன்
அஞ்சொலுற நெஞ்சுவெள்ளையாம்.

ஸ்ரீ ஜீயர் திருவடிகளே சரணம்.

------

ஸ்ரீ ராம ஜெயம்

# ஸ்ரீ நம்மாழ்வார் அருளிச்செய்த
# 2-ம் திருவாய் மொழி

கமாஸ்ராகம் - ஆதிதாளம்

கெடும் இடராய வெல்லாம் கேசவாவென்ன நாளும்
கொடுவினை செய்யும் கூற்றின் தமர்களும் குறுககில்லார்
விடமுடையரவில் பள்ளிவிரும்பினுன் சுரும்பலற்றும்
தடமுடைவயல் அனந்தபுரநகர் புகுதும் இன்றே. 1

இன்று போய்ப் புகுதிராகில் எழுமையும் ஏதம் சாரா
குன்று நேர் மாடமாடே குருந்து சேர் செருந்தி புன்னை
மன்றலர் பொழில் அனந்த புரநகர் மாயன் நாமம்
ஒன்றும் ஓராயிரமாம் உள்ளுவார்க்கு உம்பருரே 2

ஊரும்புட் கொடியும் அஃதே உலகெல்லாம் உண்டு
மிழ்ந்தான்
சேரும் தண்ணனந்த புரம் சிக்கெனப்புகுதிராகில்
தீரும் நோய்வினைகளெல்லாம் திண்ணம் நாம் அறியச்
சொன்னோம்
பேருமோராயிரத்துள் ஒன்று நீர் பேசுமினே 3

பேசுமின் கூசமின்றிப் பெரிய நீர் வேலைசூழ்ந்து
வாசமேகமழும் சோலை வயலணியனந்தபுரம்
நேசஞ்செய்து உறைகின்றுனை நெறிமையால் மலர்கள் தூவி
பூசனை செய்கின்றார்கள் புண்ணியம் செய்தவாறே 4

புண்ணியம்செய்து நல்லபுனலொடு மலர்கள் தூவி
எண்ணுமின் எந்தை நாமம் இப்பிறப்பறுக்கும் அப்பால்
திண்ணம்நாம் அறியச் சொன்னேம் செறிபொழிலனந்தபுரத்து
அண்ணலார் கமலபாதம் அணுகுவார் அமரராவர். 5

அமரராய்த்திரிகின்றார்கட்கு ஆதிசேரனந்தபுரத்து
அமரர்கோனர்ச்சிக்கின்று அங்ககப் பணிசெய்வர் விண்ணோர்
நமர்களோ! சொல்லக்கேண்மின் நாமும்போய் நணுகவேண்டும்
குமரனார் தாதைதுன்பம் துடைத்த கோவிந்தனாரே. 6

துடைத்த கோவிந்தனாரே உலகுயிர்தேவும் மற்றும்
படைத்த எம்பரமமூர்த்தி பாம்பணைப்பள்ளி கொண்டான்
மடைத்தலைவாளைபாயும் வயலணியனந்தபுரம்
கடைத்தலை சீய்க்கப் பெற்றால் கடுவினைகளையலாமே. 7

கடுவினைகளையலாகும் காமனைப்பயந்தகாளை
இடவகை கொண்ட தென்பர் எழிலணியனந்தபுரம்
படமுடையரவில் பள்ளிப்பயின்றவன் பாதம்காண
நடமினோநமர்களுள்ளீர்! நாம் உமக்கறியச் சொன்னேம். 8

நாம் உமக்கு அறியச்சொன்ன நாள்களும் நணியவான
சேமம் நன்குடைத்துக் கண்டீர் செறிபொழிலனந்தபுரம்
தூபநல்லிரை மலர்கள் துவளற ஆய்ந்து கொண்டு
வாமனனடிக்கென்றேத்த மாய்ந்தறும் வினைகள் தாமே 9

மாய்ந்தறும் வினைகள் தாமே! மாதவா என்ன நாளும்
ஏய்ந்த பொன்மதிள் அனந்தபுர நகரெந்தைக்கென்று
சாந்தொடு விளக்கம் தூபம் தாமரைமலர்கள் நல்ல
ஆய்ந்துகொண்டு ஏத்தவல்லார் அந்தமில்புகழினாரே. 10

அந்தமில்புகழ் அனந்தபுர நகராதிதன்னை
கொந்தலர்பொழில் குருகூர்மாறன் சொல்லாயிரத்துள்
ஐந்தினோடைந்தும் வல்லார் அணைவர்போய் அமருலகில்
பைந்தொடி மடந்தையர்தம் வேய்மருதோளிணையே. 11

ஸ்ரீ ஆழ்வார் திருவடிகளே சரணம்.

கெடுமிடர் வைகுந்தத்தைக் கிட்டினாற்போல்
தடமுடை அனந்தபுரந்தன்னில் - படவரவில்
கண்துயில் மாற்கு ஆட்செய்யக் காதலித்தான் மாறன் உயர்
விண்தனிலுள்ளோர் வியப்பவே.

ஸ்ரீ ஜீயர் திருவடிகளே சரணம்

--------

ஸ்ரீ ராம ஜெயம்

# ஸ்ரீ நம்மாழ்வார் அருளிச்செய்த
# 4ம் திருவாய் மொழி

பிலஹரிராகம் - அடதாளம்

மண்ணையிருந்து துழாவி வாமனன் மண்ணிதுவென்னும்
விண்ணைத்தொழுது அவன்மேவு வைகுந்தமென்று
கைகாட்டும்
கண்ணையுண்ணீர் மல்க நின்று கடல்வண்ணனென்னும்
- அன்னே! என்
பெண்ணைப் பெருமயல் செய்தாற்கு என்செய்கேன்?
பெய்வளையீரே! 1

பெய்வளைக்கைகளைக் கூப்பிப்பிரான் கிடக்கும் கடலென்னும்
செய்யதோர் ஞாயிற்றைக் காட்டிச்சிரீதரன் மூர்த்தி ஈதென்னும்
நையும் கண்ணீர்மல்க நின்று நாரணனென்னும் அன்னே! என்
தெய்வவுருவிற் சிறுமான் செய்கின்ற தொன்றறியேனே. 2

அறியும் செய்தீயைத் தழுவி அச்சுதனென்னும் மெய்வேவாள்
எறியும் தண்காற்றைத் தழுவி என்னுடைக் கோவிந்தனென்னும்
வெறிகொள்துழாய்மலர் நாறும் வினையுடையாட்டியேன் பெற்ற
செறிவளைமுன்கைச் சிறுமான் செய்கின்றதென்கண்ணுக்
கொன்றே 3

ஒன்றிய திங்களைக்காட்டி ஒளிமணிவண்ணனே! என்னும்
நின்ற குன்றத்தினைநோக்கி நெடுமாலே! வாவென்று கூவும்

நன்று பெய்யும் மழைகாணில் நாரணன் வந்தானென்று ஆடும்
என்றினமையல்கள் செய்தார் என்னுடைக் கோமளத்தையே. 4

கோமளவான் கன்றைப் புல்கிக் கோவிந்தன் மேய்த்தன
வென்னும்
போமிளநாகத்தின் பின்போய் அவன் கிடக்கை ஈதென்னும்
ஆமளவொன்றுமறியேன் வருவினையாட்டியேன் பெற்ற
கோமளவல்லியை மாயோன் மால்செய்து செய்கின்றகூத்தே. 5

கூத்தர் குடமெடுத்தாடில் கோவிந்தனெமென ஓடும்
வாய்த்த குழலோசை கேட்கில் மாயவனென்றுமையாக்கும்
ஆய்ச்சியர்வெண்ணெய்கள் காணில் அவனுண்ட வெண்ணெய்
ஈதென்னும்
பேய்ச்சிமுலை சுவைத்தாற்கு என்பெண்கொடியேறியபித்தே! 6

ஏறியபித்திஞேடு எல்லாவுலகும் கண்ணன் படைப்பென்னும்
நீறு செவ்வேயிடக்காணில் நெடுமாலடி யாரென்ருேடும்
நாறுதுழாய் மலர்காணில் நாரணன் கண்ணி ஈதென்னும்
தேறியும் தேருதும் மாயோன் திறத்தனளே இத்திருவே. 7

திருவுடை மன்னரைக் காணில் திருமாலைக் கண்டேனே
யென்னும்
உருவுடை வண்ணங்கள் காணில் உலகளந்தானென்று துள்ளும்
கருவுடைத்தேவில்களெல்லாம் கடல்வண்ணன் கோயிலே
யென்னும்
வெருவிலும் வீழ்விலுமோவாக் கண்ணன் கழல்கள்
விரும்புமே 8

விரும்பிப் பகைவரைக் காணில் வியலிடமுண்டானேயென்னும்
கரும்பெருமேகங்கள் காணில் கண்ணனென்றேறப் பறக்கும்
பெரும்புலவா நிரைகாணில் பிரானுளனென்று பின்செல்லும்
அரும்பெறல் பெண்ணினை மாயோன் அலற்றியயர்ப்
பிக்கின்ருனே 9

அயர்க்கும் சுற்றும் பற்றிநோக்கும் அகலவே நீள்நோக்குக்
கொள்ளும்
வியர்க்கும் மழைக்கண்துளும்ப வெவ்வுயிர்கொள்ளும் மெய்சோரும்

பெயர்த்தும்கண்ணு! என்றுபேசும் பெருமானே! வாவென்று கூவும்
மயல்பெருங்காத லென்பேதைக்கு என்செய்கேன்? வல்வினையேனே 10

வல்வினை தீர்க்கும் கண்ணனை வண்குருகூர்ச் சடகோபன்
சொல்வினையால் சொன்னபாடல் ஆயிரத்துள் இவைபத்தும்
நல்வினை என்று கற்பார்கள் நலனிடை வைகுந்தம் நண்ணி
தொல்வினை தீர எல்லாரும் தொழுதெழ வீற்றிருப்பாரே 11

ஸ்ரீ ஆழ்வார் திருவடிகளே சரணம்

மண்ணுலகில் முன்கலந்து மால்பிரிகையால் மாறன்
பெண்ணிலைமையாய்க் காதல்பித்தேறி - எண்ணிடில்முன்
போலிமுதலானபொருளை அவனாய் நினைந்து
மேல்விழுந்தான் மையல்தனின் வீறு

ஸ்ரீ ஜீயர் திருவடிகளே சரணம்

------

ஸ்ரீ ராமஜெயம்

# ஸ்ரீ நம்மாழ்வார் அருளிச்செய்த
# 3ம் திருவாய்மொழி

ஆனந்தபைரவிராகம் - ஆதிதாளம்

வெள்ளைச்சுரிசங்கோடாழி யேந்தித்
தாமரைக் கண்ணன் என்னெஞ்சினூடே
புள்ளைக்கடாகின்ற வாற்றைக் காணீர்
என் சொல்லிச் சொல்லுகேன்? அன்னைமீர்காள்!
வெள்ளைச்சுகமவன் வீற்றிருந்த
வேதவொலியும் விழாவொலியும்
பிள்ளைக்குழா விளையாட்டொலியும் அருத்
திருப்பேரையில் சேர்வன் நானே. 1

நானக் கருங்குழல் தோழிமீர்காள்!
அன்னையர்காள்! அயற்சேரியீர்காள்!
நான் இத்தனி நெஞ்சம் காக்கமாட்டேன்
என்வசமன்றிது. இராப்பகல் போய்
தேன் மொய்த்த பூம்பொழில் தண்பணைசூழ்
தென்திருப்பேரையில் வீற்றிருந்த
வானப்பிரான் மணிவண்ணன் கண்ணன்
செங்கனிவாயுன் திறந்ததுவே. 2

செங்கனிவாயின் திறத்த தாயும்
செஞ்சுடர்நீள் முடித்தாழ்ந்ததாயும்
சங்கொடு சக்கரம்கண்டு கந்தும்
தாமரைக்கண்களுக்கு அற்றுத்தீர்ந்தும்
திங்களும் நாளும் விழா வருத
தென்திருப்பேரையில் வீற்றிருந்த
நங்கள் பிரானுக்கு என்நெஞ்சம் தோழீ!
நாணும் நிறையும் இழந்ததுவே. 3

இழந்த எம்மாமை திறத்துப்போன
என் நெஞ்சினூரும் அங்கே யொழிந்தார்
உழந்து இனியாரைக்கொண்டு என் உசாகோ?
ஓதக்கடலொலிபோல எங்கும்
எழுந்த நல்வேதத்தொலி நின்றேருங்கு
தென்திருப்பேரையில் வீற்றிருந்த
முழங்கு சங்கக்கையன் மாயத்தாழ்ந்தேன்
அன்னையர்காள்! என்னை என்முனிந்தே? 4

முனிந்து சகட முதைத்து மாயப்பேய்
முலையுண்டு மருதிடைபோய்
கனிந்த விளவுக்குக் கன்றெறிந்த
கண்ணபிரானுக்கு என்பெண்மை தோற்றேன்
முனிந்து இனியென் செய்தீர்? அன்னைமீர்காள்!
முன்னி அவன்வந்து வீற்றிருந்த
கனிந்த பொழில் திருப்பேரையிற்கே
காலம்பெற என்னைக் காட்டுமினே. 5

காலம்பெற என்னைக் காட்டுமின்கள்
காதல் கடலின் மிகப்பெரிதால்
நீலமுகில் வண்ணத் தெம்பெருமான்
நிற்கும் முன்னே வந்துஎன் கைக்கும் எய்தான்
ஞாலத்து அவன் வந்து வீற்றிருந்த
நான்மறையாளரும் வேள்வியோவா
கோலச் செந்நெற்கள் கவரிவீசும்
கூடுபுனல் திருப்பேரையிற்கே 6

பேரெயில் சூழ்கடல் தென்னிலங்கை
செற்றபிரான் வந்து வீற்றிருந்த
பேரையிற்கே புக்கு என் நெஞ்சம் நாடிப்
பேர்த்துவரவெங்கும் காணமாட்டேன்
ஆரை இனி இங்குடையம்? தோழி!
என்நெஞ்சம் கூவ வல்லாரும் இல்லை
ஆரைஇனிக்கொண்டு என் சாதிக்கின்றது?
என்நெஞ்சம் கண்டதுவே கண்டேனே 7

கண்டதுவே கொண்டு எல்லாரும் கூடிக்
கார்க்கடல் வண்ணனோடு என் திறத்துக்
கொண்டு அலர் தூற்றிற்றது முதலாக்
கொண்ட என்காதல் உரைக்கில் தோழீ
மண்திணி ஞாலமும் ஏழ்கடலும்
நீள்விசும்பும் கழியப் பெரிதால்
தெண்திரை சூழ்ந்து அவன் வீற்றிருந்த
தென்திருப்பேரையில் சேர்வன் சென்றே. 8

சேர்வன் சென்று என்னுடைத் தோழிமீர்காள்!
அன்னையர்காள்! என்னைத்தேற்ற வேண்டா
நீர்களுரைக்கிறது என் இதற்கு
நெஞ்சு நிறைவும் எனக்கிங்கில்லை
கார்வண்ணன் கார்க்கடல் ஞாலமுண்ட
கண்ணபிரான் வந்து வீற்றிருந்த
ஏர்வளவொண் கழனிப் பழனத்
தென்திருப்பேரையின் மாநகரே! 9

நகரமும் நாடும் பிறவும் தேர்வேன்
நாணெனக்கில்லை என் தோழிமீர்காள்!
சிகரமணிநெடுமாட நீடு
தென்திருப்பேரையில் வீற்றிருந்த
மகரநெடுங்குழைக் காதன் மாயன்
நூற்றுவரை அன்று மங்க நூற்ற
நிகரில் முகில் வண்ணன் நேமியான் என்
நெஞ்சம் கவர்ந்து எனையூழியானே? 10

ஊழிதோறூழி உருவும்பேரும்
செய்கையும் வேறவன்வையம் காக்கும்
ஆழிநீர் வண்ணனை அச்சுதனை
அணிகுரு கூர்ச்சடகோபன் சொன்ன
கேழிலந்தாதி ஓராயிரத்துள் இவை
திருப்பேரையில் மேய பத்தும்
ஆழியங்கையனை ஏத்த வல்லாரவர்
அடிமைத் திறத்தாழியாரே. 11

ஸ்ரீ ஆழ்வார் திருவடிகளே சரணம்.

வெள்ளிய நாமம்கேட்டு விட்டகன்றபின் மோகம்
தெள்ளியமால் தென்திருப்பேர் சென்றுபுக - உள்ளம் அங்கே
பற்றிநின்ற தன்மைபகரும் சடகோபற்கு
அற்றவர்கள் தாம் ஆழியார்

ஸ்ரீ ஜீயர் திருவடிகளே சரணம்

ஸ்ரீ ராமஜெயம்

# ஸ்ரீ நம்மாழ்வார் அருளிச்செய்த
# 8ம் திருவாய் மொழி

தன்யாசிராகம் - ஆதிதாளம்

ஆராவமுதே! அடியேனுடலம் நின்பாலன் பாயே
நீராயலைந்துகரைய உருக்குகின்ற நெடுமாலே!
சீரார்செந்நெல் கவரிவீசும் செழுநீர்த் திருக்குடந்தை
ஏரார்கோலம் திகழக் கிடந்தாய்! கண்டேன் எம்மானே! 1

எம்மானே என்வெள்ளை மூர்த்தி! என்னையாள்வானே!
எம்மாவுருவும் வேண்டுமாற்ருல் ஆவாய்! எழிலேறே!
செம்மாகமலம் செழுநீர்மிசைக் கண்மலரும் திருக்குடந்தை
அம்மாமலர்க்கண் வளர்கின்ருனே! என் நான் செய்கேனே. 2

என் நான் செய்கேன்? யாரேகளைகண்? என்னை என்
செய்கின்ருய்?
உன்ருலல்லால் யாவராலும் ஒன்றும் குறைவேண்டேன்
கன்ஞர் மதிள் சூழ்குடந்தைக் கிடந்தாய்! அடியேனருவாஞள்
சென்ஞள் எந்நாள்? அந்நாள் உனதாள் பிடித்தே
செலக்காணே 3

செலக்காண் கிற்பார் காணுமளவும் செல்லும் கீர்த்தியாய்!
உலப்பிலானே! எல்லாவுலகுமுடைய ஒருமூர்த்தி!
நலத்தால் மிக்கார் குடந்தைக்கிடந்தாய்! உன்னைக் காண்பான்
நான்
அலப்பாய் ஆகாசத்தை நோக்கி அழுவன் தொழுவனே. 4

அழுவன் தொழுவன் ஆடிக்காண்பன் பாடியலற்றுவன்
தழுவல்வினையால் பக்கம்நோக்கி நாணிக்கவிந்திருப்பன்
செழுவொண்பழனக் குடந்தைக்கிடந்தாய்! செந்தாமரைக்
கண்ஞ!
தொழுவனேனை உனதாள் சேரும்வகையே சூழ்கண்டாய் 5

சூழ்கண்டாய் என் தொல்லைவினையையறுத்து உன்னடிசேரும்
ஊழ்கண்டிருந்தே தூராக்குழி தூர்த்து எனை நாளகன்றிருப்பன்?
வாழ்தொல்புகழார் குடந்தைக் கிடந்தாய்! வானோர்கோமானே!
யாழினிசையே! அமுதே! அறிவின்பயனே! அரியேறே! 6

அரியேறே! என்னம்பொற்சுடரே! செங்கண்கருமுகிலே!
எரியே! பவளக்குன்றே! நால்தோளெந்தாய்! உனதருளே
பிரியா அடிமை என்னைக்கொண்டாய்! குடந்தைத் திருமாலே!
தரியேன் இனிஉன்சரணம் தந்து என்சன்மம் களையாயே. 7

களைவாய் துன்பம் களையாதொழிவாய் களைகண் மற்றிலேன்
வளைவாய் நேமிப்படையாய்! குடந்தைக்கிடந்த மாமாயா!
தளராவுடலம் எனதாவி சரிந்துபோம்போது
இளையாது உனதாள் ஒருங்கப்பிடித்துப்போத இசைநீயே. 8

இசைவித்து என்னை உன்தாளிணைக்கீழ் இருத்தும் அம்மானே!
அசைவிலமரர் தலைவர்தலைவா! ஆதிப்பெருமூர்த்தி!
திசைவில் வீசும் செழுமாமணிகள் சேரும் திருக்குடந்தை
அசைவிலுலகம் பரவக்கிடந்தாய்! காணவாராயே. 9

வாரா வருவாய் வருமென்மாயா! மாயாமூர்த்தியாய்!
ஆராவமுதாய் அடியேனாவி அகமேதித்திப்பாய்
தீராவினைகள் தீர என்னையாண்டாய்! திருக்குடந்தை
ஊரா! உனக்காட்பட்டும் அடியேன் இன்னும் உழல்வேனோ? 10

உழலையென்பின் பேய்ச்சிமுலையூடு அவளை உயிருண்டான்
கழல்களவையே சரணாகக்கொண்ட குருகூர்ச்சடகோபன்
குழலின் மலியச்சொன்ன ஓராயிரத்துள் இப்பத்தும்
மழலைதீர வல்லார் காமர் மானேய் நோக்கியர்க்கே. 11

ஸ்ரீ ஆழ்வார் திருவடிகளே சரணம்.

ஆராவமுதாழ்வார் ஆதரித்த பேறுகளை
தாராமையாலே தளர்ந்துமிக - தீராத
ஆசையுடன் ஆற்றாமைபேசி யலமந்தான்
மாசறுசீர் மாறனெம்மான்

ஸ்ரீ ஜீயர் திருவடிகளே சரணம்.

ஸ்ரீராமஜெயம்

ஸ்ரீ நம்மாழ்வார் அருளிச் செய்த

# 5ம் திருவாய்மொழி

ஸஹானாராகம் - அடதாளம்

கற்பார் இராமபிரானையல்லால் மற்றும் கற்பரோ?
புற்பா முதலாப் புல்லெறும்பாதி ஒன்றின்றியே
நற்பாலயோத்தியில் வாழும் சராசரம் முற்றவும்
நற்பாலுக்கு உய்த்தனன் நான்முகனார் பெற்ற நாட்டுளே. 1

நாட்டில் பிறந்தவர் நாரணற்காளன்றியாவரோ?
நாட்டில் பிறந்து படாதனபட்டு மனிசர்க்காய்
நாட்டை நலியும் அரக்கரை நாடித்தடிந்திட்டு
நாட்டையளித்து உய்யச் செய்து நடந்தமை கேட்டுமே. 2

கேட்பார்கள் கேசவன் கீர்த்தியல்லால் மற்றும் கேட்பரோ?
கேட்பார் செவிசுடு கீழ்மைவசை வுகளைவையும்
சேட்பால் பழம்பகைவன் சிசுபாலன் திருவடி
தாட்பாலடைந்த தன்மை அறிவாரை அறிந்துமே. 3

தன்மையறிபவர்தாம் அவற்காளன் றியாவரோ?
பன்மைப் படர்பொருள் ஆதுமில் பாழ்நெடுங்காலத்து
நன்மைப் புனல்பண்ணி நான்முகனைப்பண்ணி தன்னுள்ளே
தொன்மை மயக்கிய தோற்றிய சூழல்கள் சிந்தித்தே. 4

சூழல்கள் சிந்திக்கில் மாயன் கழலன்றிச் சூழ்வரோ?
ஆழப்பெரும் புனல்தன்னுள் அழுந்திய ஞாலத்தை
தாழப்படாமல் தன்பால் ஒரு கோட்டிடைத்தான் கொண்ட
கேழல் திருவுரு வாயிற்றுக் கேட்டு முணர்ந்துமே. 5

கேட்டு முணர்ந்தவர் கேசவற்காளன் றியாவரோ?
வாட்டமிலா வண்கை மாவலிவாதிக்க வாதிப்புண்டு
ஈட்டங்கொள் தேவர்கள் சென்றிரந்தார்க்கு இடர் நீக்கிய
கோட்டங்கைவாமனனாய்ச் செய்த கூத்துக்கள் கண்டுமே. 6

கண்டும் தெளிந்தும் கற்றார் கண்ணற்காளன்றியாவரோ?
வண்டுண்மலர்த் தொங்கல் மார்க்கண்டேயனுக்கு வாழுநாள்
இண்டைச் சடைமுடி ஈசனுடன் கொண்டு உசாச்செல்ல
கொண்டங்குத் தன்னொடும் கொண்டு உடன் சென்றதுணர்ந்
துமே. 7

செல்லவுணர்ந்தவர் செல்வன்தன் சீரன்றிக்கற்பரோ?
எல்லையிலாத பெருந்தவத்தால் பலசெய்ம்மிறை
அல்லலமரரைச் செய்யும் இரணியனாகத்தை
மல்லலரியுருவாய்ச் செய்தமாயம் அறிந்துமே 8

மாயமறிபவர் மாயவற்காளன் றியாவரோ?
தாயம் செறும் ஒரு நூற்றுவர்மங்க ஓரைவர்க்காய்
தேசமறிய ஓர் சாரதியாய்ச் சென்று சேனையை
நாசம்செய்திட்டு நடந்த நல்வார்த்தையறிந்துமே. 9

வார்த்தையறிபவர் மாயவற்காளன் றியாவரோ?
போர்த்த பிறப்பொடுநோயொடு மூப்பொடு இறப்பிவை
பேர்த்து பெருந்துன்பம் வேரற நீக்கித் தன்தாளின்கீழ்ச்
சேர்த்து அவன்செய்யும் சேமத்தை எண்ணித் தெளிவுற்றே. 10

தெளிவுற்று வீவின்றி நின்றவர்க்கு இன்பக்கதி செய்யும்
தெளிவுற்ற கண்ணனைத் தென்குரு கூர்ச்சடகோபன் சொல்
தெளிவுற்ற ஆயிரத்துள் இவைபத்தும் வல்லாரவர்
தெளிவுற்ற சிந்தையர் பாமருமூவுலகத்துள்ளே. 11

ஸ்ரீ ஆழ்வார் திருவடிகளே சரணம்

கற்றோர் கருதும் விசயங்களுக்கெல்லாம்
பற்றாம்விபவகுணப் பண்புகளை – உற்றுணர்ந்து
மண்ணினுள்ளோர் தம்மிழவை வாய்ந்துரைத்த மாறன்சொல்
பண்ணில் இனிதான தமிழ்ப்பா.

ஸ்ரீ ஜீயர் திருவடிகளே சரணம்.

ஸ்ரீராமஜெயம்

ஸ்ரீ நம்மாழ்வார் அருளிச்செய்த

# 3ம் திருவாய் மொழி

ஆரபிராகம்- ஆதிதாளம்

கோவைவாயாள் பொருட்டு ஏற்றினெருத்த மிறுத்தாய்! மதிளிலங்கைக்
கோவைவீயச்சிலை குனித்தாய்! குலநல்யானை மருப்பொசித்தாய்!
பூவைவீயா நீர்தூவிப் போதால் வணங்கேனேலும் நின்
பூவைவீயாம் மேனிக்குப் பூசும்சாந்து என்னெஞ்சமே. 1

பூசும்சாந்து என்னெஞ்சமே புனையும் கண்ணி எனதுடைய
வாசகம் செய்மாலையே வான்பட்டாடையும் அஃதே
தேசமான அணிகலனும் என் கைகூப்புச் செய்கையே
ஈசன் ஞாலமுண்டுமிழந்த எந்தை ஏகமூர்த்திக்கே. 2

ஏகமூர்த்தி இருமூர்த்தி மூன்றுமூர்த்தி பலமூர்த்தி
யாகி ஐந்து பூதமாய் இரண்டு சுடராய் அருவாகி
நாகமேறி நடுக்கடலுள் துயின்ற நாராயணனே! உன்
ஆகமுற்று மகத்தடக்கி என் ஆவியல்லல்மாய்த்ததே. 3

மாயத்தலெண்ணி வாய்முலைதந்த மாயப்பேயுயிர்
மாய்த்த ஆயமாயனே! வாமனனே! மாதவா!
பூத்தண்மாலை கொண்டு உன்னைப்போதால் வணங்கேனேலும் நின்
பூத்தண்மாலை நெடுமுடிக்குப் புனையும் கண்ணி எனதுயிரே. 4

கண்ணி எனதுயிர் காதல் கனகச்சோதி முடிமுதலா
எண்ணில் பல்கலன்களும் ஏலுமாடையும் அஃதே
நண்ணி மூவுலகும் நவிற்றும் கீர்த்தியும் அஃதே
கண்ணனெம்பிரானெம்மான் காலச்சக்கரத்தானுக்கே. 5

காலச்சக்கரத்தொடு வெண்சங்கம் கையேந்தினாய்!
ஞாலமுற்றும் உண்டுமிழந்த நாராயணனே! என்றென்று
ஓலமிட்டு நானழைத்தால் ஒன்றும் வாராயாகிலும்
கோலமாம் என்சென்னிக்கு உன்கமலமன்ன குரைகழலே. 6

குரைகழல்கள் நீட்டி மண்கொண்ட கோலவாமனா!
குரைகழல்கை கூப்புவார்கள் கூடநின்ற மாயனே!
விரைகொள்பூவும் நீரும்கொண்டு ஏத்தமாட்டேனேலும் உன்
உரைகொள் சோதித்திருவுருவம் என்னதாவி மேலதே. 7

என்னதாவி மேலையாய் ஏர்கொளேழுலகமும்
துன்னிமுற்றுமாகி நின்ற சோதி ஞானமூர்த்தியாய்
உன்னதென்ன தாவியும் என்ன துன்னதாவியும்
இன்ன வண்ணமே நின்றாய் என்றுரைக்கவல்லேனே? 8

உரைக்கவல்லேனல்லேன் உன்னுலப்பில் கீர்த்தி வெள்ளத்தின்
கரைக்கணென்று செல்வன் நான்? காதல்மையலேறினேன்
புரைப்பிலாத பரம்பரனே! பொய்யிலாத பரஞ்சுடரே!
இரைத்து நல்லமேன் மக்களேத்த யானுமேத்தினேன். 9

யானுமேத்தி ஏழுலகும் முற்றுமேத்தி பின்னையும்
தானுமேத்திலும் தன்னையேத்தவேத்த எங்கெய்தும்?
தேனும்பாலும் கன்னலும் அமுதுமாகித்தித்திப்ப
யானும் எம்பிரானையே ஏத்தினேன் யானுய்வேனே. 10

உய்வுபாயம் மற்றின்மை தேறிக் கண்ணாண் கழல்கள்மேல்
செய்யதாமரைப் பழனத்தென்னம் குருகூர்ச்சடகோபன்
பொய்யில்பாடலாயிரத்துள் இவையும்பத்தும் வல்லார்கள்
வையம் மன்னி வீற்றிருந்து விண்ணும் ஆழ்வர் மண்ணூடே. 11

ஸ்ரீ ஆழ்வார் திருவடிகளே சரணம்.

கோவான ஈசன் குறையெல்லாம் தீரவே
ஓவாத காலத்து உவாதிதனை - மேவிக்
கழித்தடையக் காட்டிக் கலந்த குணமாறன்
வழுத்துதலால் வாழ்ந்தது இந்த மண்.

ஸ்ரீ ஜீயர் திருவடிகளே சரணம்.

ஸ்ரீராமஜெயம்

## ஸ்ரீ நம்மாழ்வார் அருளிச்செய்த

# 1ம் திருமொழி

முகாரி ராகம் - அட தாளம்

கையார் சக்கரத்து என் கருமாணிக்கமே யென்றென்று
பொய்யே கைம்மை சொல்லிப் புறமே புறமேயாடி
மெய்யே பெற்றொழிந்தேன் விதி வாய்க்கின்று காப்பாரார் ?
ஐயோ! கண்ணபிரான் ! அறையோ ! இனிப் போனாலே 1

போனாய் மாமருதின்னடுவே யென் பொல்லா மணியே
தேனே! யின்னமுதே! யென்றென்றே சில கூத்துச் சொல்லத்
தானே வெம் பெருமானவ னென்னாகி யொழிந்தான்
வானே மாநிலமே மற்று முற்று மென்னுள்ளனவே 2

உள்ளன மற்றுளவாப் புறமே சில மாயஞ் சொல்லி
வள்ளல்! மணிவண்ணனே யென்றென்றே யுன்னையும் வஞ்சிக்கும்
கள்ள மனந்தவிர்ந்தே யுன்னைக் கண்டுகொண்டுய்ந் தொழிந்தேன்
வெள்ளத் தணைக் கிடந்தாய்! இனியுன்னைவிட்டென் கொள்வனே

என் கொள்வன்? உன்னை விட்டென்னும் வாசகங்கள் சொல்லியும்
வன் கள்வனேன் மனத்தை வலித்துக் கண்ணநீர் சுரந்து
நின்கணெருங்க வைத்தே யென தாவியை நீக்க கில்லேன்
என் கண் மலின மறுத்தென்னைக்கூவிருளாய் கண்ணனே 4

கண்ண பிரானை விண்ணோர் கருமாணிக்கத்தை யமுதை
நண்ணியும் நண்ணகில்லேன் நடுவேயோருடம்பிலிட்டுத்
திண்ண மழுந்தக்கட்டிப் பல செய்வினைவன் கயிற்றால்
புண்ணை மறைய வரிந் தென்னைப் போகவைத்தாய் புறமே 5

புற மறக் கட்டிக் கொண்டிரு வல்வினையார் குமைக்கும்
முறை முறை யாக்கை புக லொழியக்கண்டு கொண்டொழிந்தேன்
நிற முடை நாற்றடந்தோட் செய்யவாய்ச் செய்ய தாமரைக்கண்
அற முய லாழியங் கைக் கரு மேனியம்மான்றனையே 6

அம்மானாளிப்பிரான்னவ னெவ்விடத்தான்? யானார்?
எம்மா பாலியர்க்கும் விதி வாய்க்கின்று வாய்க்குங் கண்டீர்

கைம்மா துன் பொழித்தாய்! என்றுகைதலை பூசலிட்டே
மெய்ம்மாலா யொழிந் தேனெம்பிரானுமென் மேலானே 7

மேலாத் தேவர்களும் நிலத் தேவரு மேவித்தொழும்
மாலார் வந்தின நாளடியேன் மனத்தே மன்னினூர்
சேலேய் கண்ணியரும் பெருஞ் செல்வமும் நன் மக்களும்
மேலாத் தாய் தந்தையும் மவரேயினியாவாரே 8

ஆவாரார் துணை? யென்றலை நீர்க்கடலுள்ளழுந்தும்
நாவாய் போற் பிறவிக்கடலுளனின்றுநான் துளங்கத்
தேவார் கோலத் தொடுந் திருச் சக்கரஞ்சங்கினெடும்
ஆவா வென்றருள் செய்தடியேனெடு மானனே 9

ஆனனுடையா னென்றஃதே கொண்டு கந்து வந்து
தானே யின்னருள் செய்தென்னை முற்றவுந்தானனன்
மீனுயாமையுமாய் நரசிங்கமுமாய்க் குறளாய்க்
கானரேனமுமாய்க் கற்கியாமின்னங் கார் வண்ணனே 10

கார் வண்ணன் கண்ணபிரான் கமலத்தடங் கண்ணன்றன்னை
ஏர்வள வொண்கழனிக் குரு கூர்ச்சடகோபன் சொன்ன
சீர் வண்ண வொண்டமிழ்கள்ளிவையாயிரத்துளிப்பத்தும்
ஆர் வண்ணத் தாலுரைப்பாரடிக்கீழ்ப் புகுவார் பொலிந்தே 11

நம்மாழ்வார் திருவடிகளே சரணம்

கையாருஞ் சக்கரத்தோன் காதலின்றிக் கேயிருக்கப்
பொய்யாகப்பேசும் புறனுரைக்கு - மெய்யான
பேற்றையுபகரித்த பேரருளின் தன்மை தனைப்
போற்றினனே மாறன் பொலிந்து

ஸ்ரீ ஜீயர் திருவடிகளே சரணம்

ஸ்ரீராம ஜெயம்

ராகம்:- வஸந்தராகம் தாளம்:- ஆதி

1. கண்ணன் கழலிணையை நண்ணும் மனமுடையீர்
எண்ணும் திருநாமம் திண்ணம் நாரணமே

2. நாரணன் எம்மான் பாரணங்காளன்
வாரணந் தொலைத்த காரணன் தானே.

3. தானே யுலகெல்லாம் தானே படைத்திடந்து
தானே யுண்டுமிழ்ந்து தானே யாள்வானே.

4. ஆள்வானாழி நீர் கோள்வா யரவணையான்
தாள் வாய் மலரிட்டு நாள் வாய் நாடீரே.

5. நாடீர் நாடோறும் வாடா மலர்கொண்டு
பாடீரவன் நாமம் வீடே பெறலாமே.

6. மேயான் வேங்கடம் காயா மலர் வண்ணன்
பேயார் முலையுண்ட வாயான் மாதவனே.

7. மாதவனென்றென்று ஓத வல்லீரேல்
தீதொன்றும் அடையா ஏதஞ் சாராவே.

8. சாரா ஏதங்கள் நீரார் முகில் வண்ணன்
பேரா ரோதுவார் ஆரா ரமரரே.

9. அமரர்க் கரியானைத் தமர்கட் கெளியானை
அமரத் தொழுவார்கட்கு அமரா வினைகளே.

10. வினைவல் லிருளென்னும் முனைகள் வெருவிப்போம்
சுனைநன் மலரிட்டு நினைமின் நெடியானே.

11. நெடியானருள் சூடும் படியான் சடகோபன்
நொடியாயிரத்திப் பத்து அடியார்க்கருள் பேறே

ஸ்ரீ ஆழ்வார் திருவடிகளே சரணம்

கண்ணனடியினையிற் காதலுறுவார் செயலைத்
திண்ணமுறவே சுருங்கச் செப்பியே – மண்ணவர்க்குத்
தானுபதே சிக்கை தலைக் கட்டினான் மாறன்
ஆனபுகழ் சேர் தன்னருள்

ஸ்ரீ ஜீயர் திருவடிகளே சரணம்.

---

ஸ்ரீராமஜெயம்

## ஸ்ரீ நம்மாழ்வார் அருளிச்செய்த

# 2-ம் திருவாய் மொழி

கல்யாணிராகம் – ஆதிதாளம்

பொலிக பொலிக பொலிக போயிற்று வல்லுயிர்ச்சாபம்
நலியும் நரகமும் நைந்த நமனுக்கு இங்குயாதொன்றுமில்லை
கலியும் கெடும் கண்டுகொண்மின் கடல்வண்ணன் பூதங்கள்– மண்மேல்
மலியப்புகுந்து இசைபாடி ஆடியுழிதரக் கண்டோம். 1

கண்டோம் கண்டோம் கண்டோம் கண்ணுக்கினியன கண்டோம்
தொண்டீர்! எல்லீரும் வாரீர் தொழுது தொழுது நின்றார்த்தும்
வண்டார் தண்ணந்துழாயான் மாதவன் பூதங்கள் மண்மேல்
பண்தான் பாடிநின்றாடிப் பரந்து திரிகின்றனவே. 2

திரியும் கலியுகம் நீங்கித் தேவர்கள் தாமும் புகுந்து
பெரியகிதயுகம் பற்றிப் பேரின்ப வெள்ளம் பெருக
கரியமுகில் வண்ணன் எம்மான் கடல்வண்ணன் பூதங்கள் – மண்மேல்
இரியப் புகுந்து இசைபாடி எங்கும் இடம்கொண்டனவே. 3

இடங்கொள் சமயத்தையெல்லாம் எடுத்துக்களைவனபோலே
தடங்கடல் பள்ளிப்பெருமான் தன்னுடைப் பூதங்களேயாய்
கிடந்தும் இருந்தும் எழுந்தும் கீதம் பலபலபாடி
நடந்தும் பறந்தும் குனித்தும் நாடகம் செய்கின்றனவே. 4

செய்கின்றது என் கண்ணுக்கொன்றே ஒக்கின்றது இவ்வுலகத்து
வைகுந்தன் பூதங்களேயாய் மாயத்தினால் எங்கும் மன்னி
ஐயமொன்றில்லை அரக்கர் அசுரர் பிறந்தீருள்ளீரேல்
உய்யும் வகையில்லை தொண்டீர்! ஊழிபெயர்த்திடும் கொன்றே. 5

கொன்றுயிருண்ணும் வியாதி பகைபசி தீயனவெல்லாம்
நின்று இவ்வுலகில் கடிவான் நேமிப்பிரான்தமர் போந்தார்
நன்றிசை பாடியும் துள்ளியாடியும் ஞாலம்பரந்தார்
சென்று தொழுதுய்ம்மின் தொண்டீர்! சிந்தையைச் செந்நிறுத்
தியே. 6

நிறுத்திநும் முள்ளத்துக்கொள்ளும் தெய்வங்கள் உம்மையுய்யக்கொள்
மறுத்தும் அவனோடே கண்டீர் மார்க்கண்டேயனும் கரியே
கறுத்தமனமொன்றும் வேண்டா கண்ணனல்லால் தெய்வமில்லை.
இறுப்பதெல்லாம் அவன் மூர்த்தியாயவர்க்கே இறுமினே. 7

இறுக்கும் இறையிறுத்துண்ண எவ்வுலகுக்கும் தன்மூர்த்தி
நிறுத்தினான் தெய்வங்களாக அத்தெய்வ நாயகன்தானே
மறுத்திருமார் வனவன்தன் பூதங்கள் கீதங்கள்பாடி
வெறுப்பின்றி ஞாலத்து மிக்கார்மேவித் தொழுதுய்ம்மின்நீரே. 8

மேவித்தொழுதுய்ம்மினீர்கள் வேதப்புனித விருக்கை
நாவில்கொண்டு அச்சுதன்தன்னை ஞானவிதிபிழையாமே
பூவில்புகையும் விளக்கும் சாந்தமும் நீரும்மலிந்து
மேவித்தொழும் அடியாரும் பகவரும் மிக்கதுலகே. 9

மிக்க உலகுகள்தோறும் மேவிக் கண்ணன் திருமூர்த்தி
நக்கபிரானோடு அயனும் இந்திரனும் முதலாக
தொக்க அமரர்குழாங்கள் எங்கும் பரந்தனதொண்டீர்!
ஒக்கத்தொழுகிற்றிராகில் கலியுகமொன்று மில்லையே. 10

கலியுகமொன்று மின்றிக்கே தன்னடியார்க்கு அருள்செய்யும்
மலியும் சுடரொளி மூர்த்தி மாயப்பிரான் கண்ணன் தன்னை
கலிவயல் தென்னன்குருகூர்க் காரிமாறன் சடகோபன்
ஒலிபுகழாயிரத்து இப்பத்து உள்ளத்தை மாசறுக்குமே. 11

ஸ்ரீ ஆழ்வார் திருவடிகளே சரணம்.

பொலிக பொலிகவென்று பூமகள் கோன்தொண்டர்
மலிவுதனைக் கண்டுகந்து வாழ்த்தி – உலகில்
திருந்தாதார் தம்மைத் திருத்திய மாறன்சொல்
மருந்தாகப் போகும் மனமாசு.

ஸ்ரீ ஜீயர் திருவடிகளே சரணம்.

*****

ஸ்ரீராமஜெயம்

ஸ்ரீ நம்மாழ்வார் அருளிச்செய்த

# 4ம் திருவாய் மொழி

மோகனராகம் – அடதாளம்

ஆழியெழச் சங்கும் வில்லுமெழ திசை
வாழியெழத் தண்டும் வாளுமெழ அண்டம்
மோழையெழ முடிபாதமெழ அப்பன்
ஊழியெழ உலகம் கொண்டவாறே 1

ஆறுமலைக்கு எதிர்ந்தோடுமொலி அர
வூறுசுலாய் மலை தேய்க்குமொலி கடல்
மாறு சுழன்று அழைக்கின்ற வொலி அப்பன்
சாறுபட அமுதம் கொண்ட நான்றே 2

நான்றில ஏழ்மண்ணும் தானத்தவே பின்னும்
நான்றில ஏழ்மலை தானத்தவே பின்னும்
நான்றில ஏழ்கடல் தானத்தவே அப்பன்
ஊன்றி யிடந்து எயிற்றில் கொண்டநாளே. 3

நாளு மெழ நிலநீருமெழ விண்ணும்
கோளுமெழ எரிகாலுமெழ மலை
தாளுமெழச் சுடர்தானுமெழ அப்பன்
ஊழியெழ உலகமுண்ட வூணே. 4

ஊனுடை மல்லர் ததர்ந்த வொலி மன்னர்
ஆனுடைச் சேனை நடுங்கு மொலிவிண்ணுள்
ஏனுடைத் தேவர் வெளிப்பட்ட வொலி அப்பன்
காணுடைப் பாரதம் கையறை போழ்தே. 5

போழ்து மெலிந்த புன்செக்கரில் வான்திசை
சூழுமெழுந்து உதிரப்புனலா மலை
கீழ்து பிளந்த சிங்கமொத்ததால் அப்பன்
ஆழ்துயர் செய்து அசுரரைக் கொல்லுமாறே. 6

மாறுநிரைத்து இரைக்கும் சரங்கள் இன
நூறுபிணம் மலைபோல்புரள கடல்
ஆறுமடுத்து உதிரப்புனலா அப்பன்
நீறுபட இலங்கை செற்ற நேரே. 7

நேர்சரிந்தான் கொடிககோழிக் கொண்டான் பின்னும்
நேர்சரிந்தான் எரியும் அனலோன் பின்னும்
நேர்சரிந்தான் முக்கண்மூர்த்தி கண்டீர் அப்பன்
நேர்சரிவாணன் திண்தோள் கொண்டவன்றே. 8

அன்றுமண் நீரெரிகால் விண்மலை முதல்
அன்றுசுடர் இரண்டு பிறவும் பின்னும்
அன்று மழையுயிர் தேவும் மற்றும் அப்பன்
அன்றுமுதல் உலகம் செய்ததுமே. 9

மேய்நிரை கீழ்புக மாபுரள சுனை
வாய்நிறைநீர் பிளிறிச் சொரிய இன
ஆநிரைபாடி அங்கே யொடுங்க அப்பன்
தீமழை காத்துக் குன்ற மெடுத்தானே. 10

குன்றமெடுத்தபிரான் அடியாரொடும்
ஒன்றிநின்ற சடகோபனுரை செயல்
நன்றிபுனைந்த ஓராயிரத்துள் இவை
வென்றி தரும்பத்தும் மேவிக் கற்பார்க்கே. 11

ஸ்ரீ நம்மாழ்வார் திருவடிகளே சரணம்

ஆழிவண்ணன் தன் விசயமானவை முற்றும்காட்டி
வாழிதனாலென்று மகிழ்ந்து நிற்க – ஊழிலவை
தன்னை இன்றுபோல் கண்டு தானுரைத்தமாறன்சொல்
பன்னுவரே நல்லது கற்பார்.

ஸ்ரீ ஜீயர் திருவடிகளே சரணம்.

ஸ்ரீராமஜெயம்

ஸ்ரீ திருமங்கையாழ்வார் அருளிச்செய்த

# 6ம் – திருமொழி

காம்போதிராகம் – ஆதிதாளம்

வாணிலாமுறுவல் சிறுநுதல் பெருந்தோள்
மாதரார் வனமுலைப்பயனே
பேணினேன் அதனைப்பிழையெனக்கருதிப்
பேதையேன்பிறவி நோயறுப்பான்
ஏணிலேன் இருந்தேன் எண்ணினேன் எண்ணி
இளையவர் கலவியின் திறத்தை
நாணினேன் வந்து உன்திருவடி அடைந்தேன்
நைமிசாரணியத்துள் எந்தாய்! 1

சிலம்படியுருவிற்கரு நெடுங்கண்ணார்
திறத்தனாய் அறத்தையே மறந்து
புலம்படிந்துண்ணும் போகமே பெருக்கிப்
போக்கினேன் பொழுதினைவாளா
அலம்புரிதடக்கை ஆயனே! மாயா!
வானவர்க்கரசனே! வானோர்
நலம்புரிந்திறைஞ்சும் திருவடி அடைந்தேன்
நைமிசாரணியத்துள் எந்தாய்! 2

சூதினைப்பெருக்கிக் களவினைத் துணிந்து
சுரிகுழல் மடந்தையர் திறத்து
காதலே மிகுத்துக் கண்ட வாதிரிந்த
தொண்டனேன், நமன்தமர் செய்யும்
வேதனைக்கு ஒடுங்கி நடுங்கினேன்
வேலைவெண்திரையல மரக்கடைந்த
நாதனே! வந்து உன்திருவடி அடைந்தேன்
நைமிசாரணியத்துள் எந்தாய்! 3

வம்புலாம் கூந்தல் மனைவியைத் துறந்து
பிறர்பொருள் தாரமென்றிவற்றை
நம்பினார் இறந்தால் நமன்தமர் பற்றி
எற்றிவைத்து, எரியெழுகின்ற
செம்பினாலியன்ற பாவையைப்
பாவீ! தழுவென மொழிவதற்கு அஞ்சி
நம்பனே! வந்து உன்திருவடி அடைந்தேன்
நைமிசாரணியத்துள் எந்தாய்! 4

இடும்பையாலடர்ப்புண்டு இடுமினோதுறட்டென்று
இரந்தவர்க்கு இல்லையே யென்று
நெடுஞ் சொலால் மறுத்த நீசனேன் அந்தோ!
நினைக்கிலேன் வினைப்பயன் தன்னை
கடுஞ்சொலார் கடியார் காலனார் தமரார்
படுவதோர் கொடுமிறைக்கு அஞ்சி
நடுங்கி நான்வந்து உன்திருவடி அடைந்தேன்
நைமிசாரணியத்துள் எந்தாய்! 5

கோடிய மனத்தால் சினத்தொழில் புரிந்து
திரிந்து நாயினத்தொடும் திளைத்திட்டு
ஓடியும் உழன்றும்உயிர்களே கொன்றேன்
உணர்விலேனாதலால் நமனார்
பாடியைப் பெரிதும் பரிசழித்திட்டேன்
பரமனே! பாற்கடல் கிடந்தாய்!
நாடி நான்வந்து உன்திருவடி அடைந்தேன்
நைமிசாரணியத்துள் எந்தாய்! 6

நெஞ்சினால் நினைந்தும் வாயினால் மொழிந்தும்
நீதியல்லாதன செய்தும்
துஞ்சினார் செல்லும் தொல்நெறி கேட்டே
துளங்கினேன் விளங்கனி முனிந்தாய்!
வஞ்சனேன் அடியேன் நெஞ்சினில் பிரியா
வானவா! தானவர்க்கு என்றும்
நஞ்சனே! வந்து உன்திருவடி அடைந்தேன்
நைமிசாரணியத்துள் எந்தாய்! 7

ஏவினார்கலியார் நலிகவென்று என்மேல்
எங்ஙனே வாழுமாறு? ஐவர்!
கோவினார் செய்யும் கொடுமையை மடித்தேன்
குறுங்குடி நெடுங்கடல்வண்ணா!
பாவினாரின் சொல்பல் மலர்கொண்டு உன்
பாதமே பரவி நான் பணிந்து என்
நாவினால் வந்து உன்திருவடி அடைந்தேன்
நைமிசாரணியத்துள் எந்தாய்! 8

ஊனிடைச்சுவர் வைத்து என்புதூண் நாட்டி
உரோமம்வேய்ந்து ஒன்பது வாசல்
தானுடைக்குரம்பை பிரியும்போது உன்தன்
சரணமே சரண மென்றிருந்தேன்
தேனுடைக் கமலத் திருவினுக்கரசே!
திரைகொள்மா நெடுங்கடல் கிடந்தாய்!
நானுடைத் தவத்தால் திருவடி அடைந்தேன்
நைமிசாரணி யத்துள் எந்தாய்! 9

ஏதம் வந்தணுகா வண்ணம் நாம்எண்ணி
எழுமினோ தொழுது மென்று இமையோர்
நாதன் வந்திறைஞ்சும் நைமிசாரணியத்
தெந்தையைச் சிந்தையுள் வைத்து
காதலே மிகுத்த கலியன் வாயொலிசெய்
மாலைதான் கற்று வல்லார்கள்
ஓதநீர் வையம் ஆண்டு வெண்குடைக்கீழ்
உம்பரு மாகுவர் தாமே. 10

ஸ்ரீ திருமங்கையாழ்வார் திருவடிகளே சரணம்

ஸ்ரீ ராமஜெயம்

ஸ்ரீ பெரியாழ்வார் அருளிச்செய்த

# 2ம் - திருமொழி

- அரவணையாதியான் காப்பாற் பிணிபோக்கல் -

பியாகடைராகம்-ரூபகதாளம்

நெய்க்குடத்தைப்பற்றிஏறும் எறும்புகள் போலநிரந்து எங்கும்
கைக்கொண்டு நிற்கின்ற நோய்காள்! காலம்பெற உய்யப் - போமின்
மெய்க்கொண்டு வந்து புகுந்து வேதப்பிரானார் கிடந்தார்
பைக்கொண்ட பாம்பணையோடும் பண்டன்று பட்டினம்காப்பே. 1

சித்திரகுப்த னெழுத்தால் தென்புலக்கோன் பொறியொற்றி
வைத்த இலச்சினை மாற்றித் தூதுவர்ஓடியொளித்தார்
முத்துத் திரைக்கடற் சேர்ப்பன் முதறிவாளர்முதல்வன்.
பக்தர்க்கமுதன் அடியேன் பண்டன்று பட்டினம் காப்பே. 2

வயிற்றில் தொழுவைப் பிரித்து வன்புலச் சேவையதாக்கி
கயிற்றும் அக்காணி கழித்துக் காலிடைப் பாசம் கழற்றி
எயிற்றிடை மண்கொண்டஎந்தை இராப்பகல் ஓதுவித்துஎன்னைப்
பயிற்றிப் பணிசெய்யக் கொண்டான் பண்டன்று பட்டினம் காப்பே. 3

மங்கிய வல்வினை நோய்காள்! உமக்கும் ஓர்வல்வினைகண்டீர்
இங்குப் புகேன்மின்புகேன்மின் எளிதன்று கண்டீர் புகேன்மின்
சிங்கப் பிரானவன் எம்மான் சேரும் திருக்கோயில் கண்டீர்
பங்கப்படாது உய்யப்போமின் பண்டன்று பட்டினம்காப்பே. 4

மாணிக் குறளுருவாய மாயனை என் மனத்துள்ளே
பேணிக்கொணர்ந்து புகுதவைத்துக் கொண்டேன் பிறிதின்றி
மாணிக்கப் பண்டாரம் கண்டீர் வலிவன் குறும்பர்களுள்ளீர்!
பாணிக்க வேண்டா நடமின் பண்டன்று பட்டினம் காப்பே. 5

உற்றவுறு பிணிநோய்காள்! உமக்கு ஒன்று சொல்லுகேன் கேண்மின்
பெற்றங்கள் மேய்க்கும்பிரானார் பேணும் திருக்கோயில் கண்டீர்
அற்றமுரைக்கின்றேன் இன்னம் ஆழ்வினைகாள்! உமக்கு இங்கு ஓர்
பற்றில்லை கண்டீர் நடமின் பண்டன்று பட்டினம் காப்பே. 6

கொங்கைச் சிறுவரையென்னும் பொதும்பினில் வீழ்ந்துவழுக்கி
அங்கோர்முழையினில் புக்கிட்டு அழுந்திக்கிடந்துழல்வேனை
வங்கக்கடல் வண்ணன் அம்மான் வல்வினையாயின மாற்றி
பங்கப்படாவண்ணம் செய்தான் பண்டன்று பட்டினம்காப்பே. 7

ஏதங்களாயின வெல்லாம் இறங்கலிடுவித்து என்னுள்ளே
பீதகவாடைப் பிரானார் பிரமகுருவாகிவந்து
போதில் கமலவன்னெஞ்சம் புகுந்து என்சென்னித்திடரில்
பாதவிலச்சினை வைத்தார் பண்டன்று பட்டினம் காப்பே. 8

உறகலுறகலுறகல் ஒண்சுடராழியே! சங்கே!
அறவெறி நாந்தகவாளே! அழகிய சார்ங்கமே! தண்டே!
இறவுபடாமலிருந்த எண்மர் உலோக பாலீர்காள்!
பறவையரையா! உறகல் பள்ளியறை குறிக்கொண்மின். 9

அரவத்தமளியினோடும் அழகிய பாற்கடலோடும்
அரவிந்தப் பாவையும் தானும் அகம்படிவந்து புகுந்து
பரவைத்திரை பலமோதப் பள்ளி கொள்கின்ற பிரானை
பரவுகின்றான் விட்டுச் சித்தன் பட்டினம் காவற் பொருட்டே. 10

ஸ்ரீ பெரியாழ்வார் திருவடிகளே சரணம்.

திருமங்கையாழ்வார் அருளிச்செய்த

# திருநெடுந்தாண்டகம்

கல்யாணிராகம் - அடதாளம்

மின்னுருவாய் முன்னுருவில் வேதம் நான்காய்
விளக்கொளியாய் முளைத்தெழுந்த திங்கள் தானாய்
பின்னுருவாய் முன்னுருவிற் பிணிமுப்பில்லாப்
பிறப்பிலியாய் இறப்பதற்கே எண்ணாது எண்ணும்
பொன்னுருவாய்மணியுருவிற் பூதமைந்தாய்ப்
புனலுருவாய் அனலுருவில் திகழும் சோதி
தன்னுருவாய் என்னுருவில் நின்ற எந்தை
தளிர்புரையும் திருவடி என்தலைமேலவே.

# திருப்பல்லாண்டு

நாட்டைராகம் - அடதாளம்

அடியோமோடும் நின்னோடும் பிரிவின்றி ஆயிரம்பல்லாண்டு
வடிவாய் நின்வலமார்பினில் வாழ்கின்ற மங்கையும் பல்லாண்டு
வடிவார்சோதி வலத்துறையும் சுடராழியும் பல்லாண்டு
படைபோர் புக்கு முழங்கும் அப்பாஞ்ச சன்னியமும் பல்லாண்டே.

ஸ்ரீராமஜெயம்

## நாகபாசப் படலம்

# கெருடாழ்வார் வருகை

இத்தன்மை யெய்து மளவின்கணின்ற விமையோர்களஞ்சியிதுபோய்
எத்தன்மை யெய்தி முடியுங்கொலென்று குலைகின்ற வெல்லை
யதன் வாய்
அத்தன்மை கண்டு புடைநின்ற வண்ணல் கலுழன்றனன் பின்மிசையால்
சித்தந் நடுங்கி யிது தீர மெள்ள விருளூடு வந்து தெரிவான். 1

அசையாத சிந்தை யரவாலனுங்க வழியாத வுள்ளமழிவான்
இசையா விலங்கை யரசோடு மண்ண லருளின்மை கண்டு நயவான்
விசையாலனுங்க வடமேரு வைய மொளியால் விளங்க விமையாத்
திசையானை கண்கள் முகிழா வொடுங்க நிறைகால் வழங்கு
சிறையான் 2

காதங்கள் கோடி கடை சென்று காணு நயனங்கள் வாரி கலுழக்
கேதங்கள் கூர வயர்கின்ற வள்ளல் திருமேனி கண்டு கிளர்வான்
சீதங்கொள் வேலை யலை சிந்த ஞால மிருள் சிந்த வந்த சிறையான்
வேதங்கள் பாட வுலகங்கள் யாவும் வினை சிந்த நாகமெலிய 3

அல்லைச் சுருட்டி வெயிலைப் பரப்பி யகலாசை யெங்கு மழியா
லில்லைச் செலுத்தி நிலவைத் திரட்டி விரிகின்ற சோதி மிளிர
ல்லைக் குயிற்றி யெரிகின்ற மோலி யிடை நின்ற மேரு வெனுமத்
தொல்லைப் பொருப்பின் மிசையே விளங்கு சுடரோனின்மும்மை
சுடர 4

நன்பால் விளங்கு மணிகோடியோடு நளிர் போது செம்பொன் முதலாத்
ன்பாலியைந்த நிழல் கொண்டமைந்த தழுவாது வந்து தழுவ
மின்பாலியன்ற தொருகுன்றம் வானின் மிளிர் கினன்ற தென்ன
வெயிலோன்
தன்பாலெழுந்து வடபால் நிமிர்ந்து வருகின்ற செய்கை தெரிய 5

பன்னாகர் சென்னி மணிகோடி கோடி பலர் கொண்டு செய்த வகையா
மின்னாலியன்ற தெனலாய் விளங்கு மிளிர் பூண்வயங்கும் வெயில்கால்
பொன்னாலியன்ற நகையோடை பொங்க வன மாலை மார்பு புரளத்
தொன்னாள் பிரிந்த துயர் தீர வண்ணல் திருமேனி கண்டு
தொழுவான். 6

முடிமேல் நிமிர்ந்த முகிழேறு கையன் முகின் மேல் நிமிர்ந்த
வொளியான்
அடிமேல் விழுந்து பணியாமல் நின்ற நிலையுன்னி யுன்னி யழிவான்
கொடிமேலிருந்திவ் வுலகே ழொடேழு தொழ நின்ற கோளு
மிலனாய்ப்
படிமே லெழுந்து வருவான் விரைந்து பலகால் நினைந்து
பணிவான் 7

வந்தான் மறைந்து பிரிவால் வருந்து மலர் மேலயன் தன் முதலோர்
தந்தாதை தாதை யிறைவா மறைந்து விளையாடுகின்ற தனியோய்
சிந்தா குலங்கள் களைவாய் தளர்ந்து துயர்கூர லென்ன செயலோ
எந்தாய் வருந்த லுடையாய் வருந்த லென வின்ன பன்னி
மொழிவான் 8

தேவாதி தேவர்பலராலு முந்து திருநாம மோது செயலோய்
மூவாதெ நாளு முலகேழொடேழு மரசாளு மேன்மை முதல்வா
மேவாத வின்ப மவை மேவி மேவ நெடுவீடு காட்ட முடியாய்
ஆவாய் வருந்தி யழிவாய் கொலாரிவ் வதிரேக மாயை யறிவார் 9

எழுவா யெவர்க்கு முதலாகி யீறோடிடையாகி யெங்கு முளையாய்
வழுவாத வர்க்கும் வரமீய வல்லை யவரால் வரங்கள் பெறுவாய்
தொழுவா யுணர்ச்சி தொடராத தன்மை யுருவாய் மறைந்து துயரால்
அழுவா யொருத்த னுளை போலு மாரிவ் வதிரேக மாயை
யறிவார் 10

உன்னொக்க வைத்த விருவர்க்கு மொத்தியொருவர்க்கு முண்மை
யுரையாய்
முன்னொக்க நிற்றி யுலகொக்க வொத்திமுடிவொக்கி னொன்று
முடியாய்

என்னொக்கு மின்ன செயலோ லிதென்னி லிருளொக்கு
மென்றுவிடியாய்
அந்நொப்ப மேகொல் பிறிதே கொலாரிவ்வதிரேக மாயை
யறிவார் 11

வாணாளளித்தி முடியாமல் நீதி வருநாளு நிற்றி மறையோய்
பேணாயுனக்கொர் பொருள் வேண்டு மென்று பெறுவானருத்தி
பிழையாய்
ஊணாயுயிர்க்கு முயிராகி நிற்றி யுணர்வாய பெண்ணினுருவாய்
ஆணாகி மற்று மலியாகி யாரிவ் வதிரேக மாயை யறிவார். 12

தானந்த மில்லை பல வென்னு மொன்று தனியென்னு மொன்று
தவிரா
ஞானந் தொடர்ந்த சுடரென்று மொன்று நயனந் தொடர்ந்த
வொளியால்
வானந் தொடர்ந்த பதமென்னு முன்னை மறை நாலின்வந்த
முறையால்
ஆனந்த மென்னு மயலென்னு மாரிவ் வதிரேக மாயை
யறிவார். 13

மீளாத வேத முடிவின் கண் நின்னை மெய்யாக மெய்யினினையும்
கேளாத வென்று பிறவென்று சொன்ன கெடுவார்கள் சொன்ன
கடவான்
மாளாத நீதி யிகழாமை நின்னையிமான மில்லை வறியோர்
ஆளாயும் வாழ்தி யரசாள்தி யாரிவ் வதிரேக மாயை யறிவார். 14

சொல் லொன்றுரைத்தி பொருளாதி தூய மறையுந் துறந்து
திரிவாய்
வில்லொன்றெடுத்தி சரமொன்றெடுத்தி மிளிர் சங்க மங்கை
யுடையாய்
கொல்லென்றுரைத்தி கொலையுண்டு நிற்றி கொடியாயுன்
மாயை யறியேன்
அல்லென்று நிற்றி பகலாதி யாரிவ் வதிரேக மாயை யறிவார். 15

மறந்தாயு மொத்தி மறவாயு மொத்தி மயலாகும் யானு மறியேம்
துறந்தாயு மொத்தி துறவாயு மொத்தி யொரு தன்மை சொல்ல வரியாய்
பிறந்தாயு மொத்தி பிறவாயு மொத்தி பிறவாமல் நல்கு பெரியோய்
அறந்தானிறுத்த லரிதாக வாரிவ் வதிரேக மாயை யறிவார். 16

வினை வர்க்க முற்று முடனே படைத்தி யவை யெய்தி யென்றும் விளையா
நினைவர்க்கு நெஞ்சி னுறுகாம முற்றி யறியாமை நிற்றி மனமா
முனைவர்க்கு முத்தி யமரர்க்கு மற்றிம் முழுமூட ரென்னு முதலோர்
அனைவர்க்கு மொத்தி யறியாமை யாரிவ் வதிரேக மாயை யறிவார். 17

எறிந்தாரு மேறு படுவாருமின்ன பொருள் கண்டி ரங்கு பவரும்
செறிந்தாரினுண்மை யெனலாய தன்மை தெரிகின்ற துன்ன திடையே
பிறிந்தார் பிறிந்த பொருளோடு போதி பிறியாது நிற்றி பெரியோய்
அறிந்தாரறிந்த பொருளாதி யாரிவ் வதிரேக மாயை யறிவார் 18

பேராயிரங்களுடையாய் பிறந்த பொருள் தோறு நிற்றி பிரியாய்
தீராய் பிரிந்து திரிவாய் திறந்தொறவை தேறு மென்று தெளியாய்
கூராழியங்கை யுடையாய் திரண்டொருருவாதி கோடலுரி போல்
ஆராயினேது மிலையாதி யாரிவ் வதிரேக மாயை யறிவார் 19

என்றின்ன பன்னி யழிவா னெறிந்த வெறிசோதி கீற விருள் போய்ப்
பொன்றுன்னி யன்ன வெயில் வீசுகின்ற பொருள் கண்டு நின்ற புகழோன்
நின்றுன்னி யுன்னி யிவன் யாவனென்னு நிமிர்கின்ற வெல்லை நிமிரச்
சென்றுன்னு முன்ன ருடனாயினானிவ் வுலகேழு முடு சிறையான் 20

வாசங்கலந்த மரை நாள நூலின் வகையென்ப தென்னை மழையென்று
ஆசங்கை கொண்ட கொடைமீளி யண்ணல்சடையன்றன் வெண்ணெயனுகும்
தேசங்கலந்த மறைவாணர் செஞ் சொலறிவாள ரென்றிம் முதலோர்
பாசங் கலந்த பசிபோலகன்ற பதகன் துரந்த வுரகம்

பல்லாயிரத்தின் முடியாத பக்க மவை வீச வந்து படர்கால்
செல்லா நிலத்தி னிருளாதல் செல்ல வுடனின்ற வாளி சிதறுற்று
எல்லா விதத்து முணர்வோடு நண்ணி யிவனே பிழைக்கு மெனவோர்
வல்லானொருத்த னிடையே படுத்த வடுவான மேனி வடுவும் 22

தருமத்தினொன்று மொழுகாத செய்கை தழுவிப் புணர்ந்த கையால்
உருமொத்த வெங்கண் வினைதீய வஞ்சருட லுய்ந்த தில்லை யுலகின்
கருமத்தினின்ற கலிசேனை வெள்ள மலர் மேயவ் வள்ளல் கடைநாள்
நிருமித்த வென்ன வுயிரோ டெழுந்து நிலை நின்ற தெய்வ
நெறியால் 23

இளையானெழுந்து தொழுவானை யன்பினி ணையார மார்பினணையா
விளையாத துன்பம் விளைவித்த தெய்வம் வெளி வந்த தென்ன வியவாக்
கிளையாரினின்ன துணையோரையாவி கெழுவாவெழுந்து தழுவா
முளையாத திங்களுகிரான் முன் வந்து முறை நின்ற வீரன்
மொழிவான் 24

ஐய நீ யாரை யெங்களருந்தவப் பயத்தின் வந்திங்கு
எய்தினை யுயிரும் வாழ்வு மீந்தனை யெம்மனோரால்
கையுறை கோடற் கொத்த காட்சியை யல்லை மீட்சி
செய்திற மிலையா லென்றான் தேவர்க்குந் தெரிகிலாதான். 25

பொருளினி யுணர வேறு புறத்து மொன்றுண்டோ புந்தித்
தெருளினை யுடையராயிற் செயலருங் கருணைச் செல்வம்
அருளினை வரவின் வந்த வாழ்க்கைய் தாகின் வாயால்
அருளினை யென்னி னெய்த வரியான வுளவோ வைய. 26

கண்டிலை முன்பு சொல்லக் கேட்டிலை கடனொன் றெம்பால்
கொண்டிலை கொடுப்பதல்லாற் குறையிலை யிது நின் கொள்கை
உண்டிலை யென்ன நின்ற வுயிர் தந்த வுதவி யோனே
பண்டிலை நண்பு நாங்கள் செய்வதென் பகர்தி யென்றான். 27

பறவையின் குலங்கள் காக்கும் பாவகன் பழைய நின்னோடு
உறவுள தன்மை யெல்லா முணர்த்துவனரக்க னோடம்
மறவினை முடித்த பின்னர் வருவனின்னுழையன் மாயப்
பிறவியின் பகைஞ நல்கு விடையெனப் பெயர்ந்து போனான். 28

ஆரியனவனை நோக்கி யாருயிருதவியாதும்
காரியமில்லலான் போனான் கருணையோர் கடன் மையீதால்
பேரியலாளர் செய்கை யூதியம் பிடித்து மென்னார்
மாரியை நோக்கிக் கைம்மா றியற்றுமோ வையமென்றான். 29

சுபம்

ஸ்ரீ சீதா ராமச் சந்திரப் பரப் பிரம்மனே நம.

ஸ்ரீராமஜெயம்

## ஸ்ரீ ராமச்சந்திரப் பரமப் பிரம்மனே நம

# ஸ்ரீ நாம ராமாயணம்

### பாலகாண்டம்

சுத்த ப்ரஹ்ம பராத்பர ராம - காலாத்மக பரமேஸ்வர ராம
ஸேஷதல்ப ஸுக நித்ரித ராம - ப்ரஹ்மாத்யமர ப்ரார்த்தித ராம
சண்டகிரணகுல மண்டந ராம - ஸ்ரீமத் தஸரத நந்தந ராம
கௌஸல்யா ஸுக வர்த்தந ராம - விஸ்வாமித்ர ப்ரியதம ராம
கோர தாடகாகாதக ராம - மாரீசாதி நிபாதக ராம
கௌஸிக மகஸம்ரக்ஷக ராம - ஸ்ரீமதஹல்யோத்தாரக ராம
கௌதமமுநி ஸம்பூஜித ராம - ஸுரமுநிவரகண ஸம்ஸ்துத ராம
நாவிக தாவித ம்ருதுபத ராம - மிதிலாபுரஜந மோஹக ராம
விதேஹ மாநஸ ரஞ்ஜக ராம - த்ரியம்பக கார்முக பஞ்ஜக ராம
ஸீதார்ப்பித வர மாலிக ராம - க்ருதவைவாஹிக கௌதுக ராம
பார்க்கவ தர்ப்ப விநாஸக ராம - ஸ்ரீமதயோத்யா பாலக ராம.

### அயோத்யா காண்டம்

அகணிதகுணகண பூஷித ராம - அவநீ தநயா காமித ராம
ராகாசந்த்ர ஸமாநந ராம - பித்ரு வாக்யாஸ்ரித காநந ராம
ப்ரியகுஹ விநிவேதிதபத ராம - தத்க்ஷாலிதநிஜ ம்ருதுபத ராம
பரத்வாஜ முகாநந்தக ராம - சித்ரகூடாத்ரி நிகேதந ராம
தஸரத ஸந்தத சிந்தித ராம - கைகேயீ தநயார்த்தித ராம
விரசித நிஜபித்ருகர்மக ராம - பரதார்ப்பித நிஜ பாதுக ராம

### ஆரண்ய காண்டம்

தண்டகாவநஜந பாவந ராம - துஷ்டவிராத விநாஸந ராம
ஸரபங்க ஸுதீக்ஷ்ண அர்ச்சித ராம - அகஸ்த்யாநுக்ரஹ வர்த்தித ராம
க்ருத்ராதிப ஸம்ஸேவித ராம - பஞ்சவடீ தடஸுஸ்தித ராம
சூர்ப்பணகார்த்தி விதாயக ராம - கரதூஷணமுக சூதக ராம
ஸீதாப்ரிய ஹரிணாநுக ராம - மாரீசார்த்தி க்ருதாஸுக ராம
விநஷ்ட ஸீதாந்வேஷக ராம - க்ருத்ராதிப கதி தாயக ராம
ஸபரீ தத்த பலாஸந ராம - கபந்த பாஹுச்சேதந ராம

## கிஷ்கிந்தா காண்டம்

ஹநுமத் ஸேவித நிஜபத ராம – நதஸுக்ரீவாபீஷ்டத ராம
கர்வித வாலி ஸம்ஹாரக ராம – வாநர தூத ப்ரேஷக ராம
ஹிதகர லக்ஷ்மண ஸம்யுத ராம

## ஸுந்தர காண்டம்

கபிவர ஸந்தத ஸம்ஸ்ம்ருத ராம – தத்கதி விக்ந த்வம்ஸக ராம
ஸீதாப்ராணாதாரக ராம – துஷ்ட தஸாநந தூஷித ராம
ஸிஷ்ட ஹநுமத் பூஷித ராம – ஸீதோதிதகா காவந ராம
க்ருத சூடாமணி தர்ஸந ராம – கபிவர வசநாஸ்வாஸித ராம

## யுத்த காண்டம்

ராவண நிதந ப்ரஸ்தித ராம – வாநர ஸைந்ய ஸமாவ்ருத ராம
ஸோஷித ஸரிதீஸார்த்தித ராம – விபீஷணாபய தாயக ராம
பர்வத ஸேது நிபந்தக ராம – கும்பகர்ண ஸிரச்சேதக ராம
ராக்ஷஸ ஸங்க விமர்தக ராம – அஹிமஹி ராவண சாரண ராம
ஸம்ஹ்ருத தஸமுக ராவண ராம – விதிபவமுகஸுர ஸம்ஸ்துத ராம
கஸ்தித தஸரத வீக்ஷித ராம – ஸீதா தர்ஸந மோதித ராம
அபிஷிக்த விபீஷண நத ராம – புஷ்பக யாநாரோ ஹண ராம
பரத்வாஜாபிநி ஷேவணராம – பரத ப்ராண ப்ரியகர ராம
ஸாகேதபுரீ பூஷண ராம – ஸகல ஸ்வீய ஸமாநத ராம
ரத்ந லஸத் பீடாஸ்தித ராம – பட்டாபிஷேகாலங்க்ருத ராம
பார்த்திவகுல ஸ்ம்மாநித ராம – விபீஷணார்ப்பித ரங்கக ராம
கீஸகுலாநுக்ர ஹகர ராம – ஸகலஜீவ ஸம்ரக்ஷக ராம
ஸமஸ்த லோகாதாரக ராம.

## உத்தர காண்டம்

ஆகத முநிகண ஸம்ஸ்துத ராம – விஸ்ருத தஸகண்டோத்பவ ராம
ஸீதாலங்கந நிர்வ்ருத ராம – நீதி ஸுரக்ஷித ஜநபத ராம
விபிந த்யாஜித ஜநகஜ ராம – காரித லவணாஸுரவத ராம
ஸ்வர்க்கத ஸம்புக ஸம்ஸ்துத ராம – ஸ்வதநய குஸலவ நந்தித ராம
அஸ்வமேத க்ரது தீக்ஷித ராம – காலாவேதித ஸுரபத ராம
ஆயோத்யகஜந முத்தித ராம – விதிமுக விபுதாநந்தக ராம
தேஜோமய நிஜரூபக ராம – ஸம்ஸ்ருதி பந்த விமோசக ராம
தர்ம ஸ்தாபந தத்பர ராம – பக்திபராயண முக்தித ராம
ஸர்வசராசர பாலக ராம – ஸர்வ பவாமய வாரக ராம
வைகுண்டாலய ஸம்ஸ்தித ராம – நித்யாநந்த பதஸ்தித ராம
ராம ராம ஜய ராஜா ராம – ராம ராம ஜய ஸீதா ராம

**மங்களம்**

பயஹர மங்கள தஸரத ராம - ஜய ஜய மங்கள சீதா ராம
மங்களகர ஜய மங்கள ராம - ஸங்கத ஸுபவிபவோதய ராம
ஆநந்தாம்ருத வர்ஷக ராம - ஆஸரித வத்ஸல ஜய ஜய ராம
ரகுபதி ராகவ ராஜா ராம - பதித பாவந சீதா ராம.

ஸ்ரீ நாம ராமாயணம் ஸம்பூர்ணம்.

********

ஸ்ரீராமஜெயம்

# ஸ்ரீ ஆஞ்ஜநேய அஷ்டோத்திர நாமாவளியின்
# விஷய வைலக்ஷண்யம்

**ஓம் தத்வ ஞான ப்ரதாய நம:-**
உண்மையான ஆத்ம ஞானத்தைஉலகோருக்கு விளங்கும்படி காட்டியவர்.

**ஓம் ஸர்வ மாயா விபஞ்ஜந நம:-**
எவ்வகை மாயையான அஞ்ஞான இருளையும் போக்கடித்துக் கொண்டவர்

**ஓம் ஸர்வலோக சாரிணேநம:-**
எந்த உலகங்களுக்கும் தடையின்றிச் செல்லும் பெருமையோன்.

**ஓம் மநோஜவாய நம:-**
மனோ வேகத்திலும் மிக்க வேகத்தை உடையவர்.

**ஓம் ஸர்வ து:க ஹராய நம:-**
தம்மை பக்திசெய்யும் அடியார்களின் துக்கத்தை அறவே போக்கும் திறமையுடையவர்.

**ஓம் ஸர்வ யந்த்ராத்மிகாய நம:-**
எல்லாவகை யந்திரங்களின் ரூபமாகவும் இருந்து அருள் புரிபவர்.

**ஓம் குமார ப்ரஹ்மசாரிணே நம:-**

என்றும் இளமையுடன் இருந்து பிரமச்சரிய விரதத்தை அனுஷ்டிப்பவர்.

**ஓம் தைத்ய குலாந்தகாய நம:-**

அசுரர் குலத்தை வேரறுத்த அதிக வீரமுள்ளவர்.

**ஓம் ஸுரார்ச்சிதாய நம:-**

தேவர்கள் பூஜிக்கும் பெருமை உடையவர்

**ஓம் காராக்ரஹ விமோக்த்ரே நம:-**

சீதா தேவியின் சிறை வாசத்தைப் போக்க அருந்துணை புரிந்தவர்.

**ஓம் லக்ஷ்மண ப்ராணதாத்ரே நம:-**

சஞ்சீவிமலையைக் கொண்டுவந்து இளயபெருமாளை உயிர் பிழைக்க வைத்தவர்.

**ஓம் ஸீதா ஸோக நிவாரணாய நம:-**

ஸீதா பிராட்டியாரின் துக்கத்தைப் போக்கியவர்.

**ஓம் பாலார்க்க ஸத்ரு ஸாநந நம:-**

இளம் சூரியனைப்போன்ற ஒளி பொருந்திய திருமுகத்தையுடையவர்.

**ஓம் காமரூபிணே நம:-**

இச்சையான வடிவை எடுக்கும் மந்திர சக்தியுடையவர்.

**ஓம் பக்த வத்ஸலாய நம:-**

தன்பக்தர்களை பரிந்து பாதுகாப்பவர்.

**ஓம் யோகிநே நம:-**

சதா காலமும் ஸ்ரீராம் தியானத்திலேயே ஆழ்ந்திருப்பவர்.

**ஓம் வாகதீஸாய நம:-**

வன்மை பொருந்திய வாக்கிற்குத் தலைவர்.

ஓம் ருத்ர வீர்ய ஸமுத்பவாய நம:-
உருத்திர மூர்த்தியின் அம்சமாக அவதரித்தவர்.

ஓம் பார்த்தத் வஜாக்ர ஸம்வாஸிநே நம:-
அர்ச்சுணனின் தேர்க் கொடியில் பரிவுடன் அமர்ந்தவர்.

ஓம் காஞ்சநாப நம :-
பொன் போன்ற நிறம் வாய்ந்த சரீரமுடையவர்.

ஓம் சதுர்வித ஸமர்த்தாய நம :-
நால்வகை புருஷார்த்தங்களையுடையவர்.

ஓம் ராமகதாலோலாய நம :-
ஸ்ரீராமகதை நடக்கும் இடமெல்லாம் வந்திருந்து கேட்டு ஆனந்தமடைபவர்.

ஓம் லோகஸோக விநாஸாய நம :-
உலகத்தில் உள்ள துன்பங்களை அழிக்கக்கூடிய திறமை யுடையவர்.

ஓம் ஸீதானுக்ரஹ ப்ராப்தாய நம :-
ஸீதா பிராட்டியால் சிரஞ்சீவி என்று அனுக்கிரகிக்கப் பட்டவர்.

ஓம் ஸாக ரோத்தாரகாய நம :-
ஸ்ரீராம தொண்டிற்காக சமுத்திரத்தைக் கடந்தவர்.

ஓம் அஞ்ஜநா கர்ப்ப ஸம்பூதாய நம :-
அஞ்சனாதேவியின் திருவயிற்றில் அவதரித்தவர்.

சுபம்

ஸ்ரீராமஜெயம்

# அநுமார் அநுபூதி

## காப்பு

அநுமா ரநுபூதி யன்பா யான்பாடத்
தநுவாள் சங்காழி கதைதாங்கி – மநுமோர்
புருடன் றிருவடிகள் பொற்புய மேற்கொள்ளும்
கருடன் றிருவடிகள் காப்பு.

## வித்தையும் பக்தியும் உண்டாக

ஆதிப் பரமான விராம னுயர்
சோதிப் பதமே தொழு தூயவனே
நீதித் துணையே யநுமந்த நினை
ஓதித் தொழ வென்னையு கந்தருளே, 1

## வீரம் உண்டாக

சுட்டாய் புரமுன்றவை தூளெழவே
விட்டாயுதை காலனை வீழ்தருமா
றட்டாய் மதனாகமுன் மாருதி பின்
இட்டா யெரிதுட்ட ரிலங்கையினே. 2

## நிலக்காவல்

சவத்தே பொருகின்ற நிசாசரரைக்
கொலத் தேறிய வானர கோளரிதான்
நலத்தே யெனை நண்ண நயந்து நனி
நிலத்தே தனி நின்று புரந்திடுமே. 3

## அடைக்கலம்

உய்யா வுடலுய்யு மருந்து மலைக்
கையா வனுமந்த கலா நிதியே
மையார் களனாகிய வானவனே
ஜயா வடிவேனு னடைக் கலமே. 4

## சரணதசகம்

சரணஞ் சரணந் தருமன் புடனே
சரணஞ் சரணந் தமியேனு னதாள்
சரணஞ் சரணந் தயைசெய் தெனையால்
சரணஞ் சரணந் தனிமா ருதியே.

அநுமார் அநூபூதி முற்றிற்று.

******

## துதி

என்னாளும் பெரிய பெருமாளரங்கர் நகைமுகமும்
திருத்தோளும் தொடர்ந்தென்னை யாழும் விழியும் துழாய் -
மணக்கும்
திருத்தாளும் கரமும் கரத்திற் சங்காழியும் தண்டும் வில்லும்
வாளும் துணைவருமே தமியேனை வளைந்துகொண்டே.

## வாழ்த்து

திருவாழி சங்கு திருஆழி வாழி சிறந்த கொண்டல்
உருவாழியோகத் திருத்துயில்வாழி உலகளந்த
மருவார் மதுமலர்த்தாள் வாழி வாழி வணங்குமன்பர்
பெருவாழ்வனைய பெருமாளரங்கப் பெருஞ்செல்வமே.

## புராணம்

இவ்வண்ணம் நிகழ்ந்த வண்ணமினியிந்த வுலகுக்கெல்லாம்
உய்வண்ண மன்றி மற்றோர் துயர் வண்ண முறுவதுண்டோ
மைவண்ணத் தரக்கி போரில் மழைவண்ணத் தண்ணலேயுன்
கைவண்ண மங்குகண்டேன் கால் வண்ணமிங்கு கண்டேன்.

மும்மைசால் உலகிற்கெல்லாம் மூலமந்திரத்தை முற்றும்
தம்மையே தமக்கு நல்கும் தனிப்பெரும் பதத்தைத் தாமே
இம்மையே எழுமை நோய்க்கும் மருந்தினை ராம னென்னும்
செம்மைசேர் நாமம் தன்னைக் கண்களில் தெரியக்கண்டேன்.

ஸ்ரீராமஜெயம்

# மங்களம்

அஸாவேரிராகம் - ஆதிதாளம்

**பல்லவி**

ஸ்ரீராமச்சந்திரனுக்கு ஜயமங்களம் - நல்ல
திவ்விய முகச்சந்திரனுக்கு சுபமங்களம்.

**அனுபல்லவி**

மாரா பிராமனுக்கு மன்னுபரந்தாமனுக்கு
ஈராறு நாமனுக்கு இரவிகுல சோமனுக்கு (ஸ்ரீராம)

**சரணம்**

கொண்டல் மணிவண்ணனுக்குக் கண்ணனுக்கு மங்களம்
கோசலை குமாரனுக்குப் வீரனுக்கு மங்களம்
புண்டரீகத் தாளனுக்கு பூச்சக்கிர தாளனுக்குத்
தண்டுளவத் தோளனுக்குத் சானகிம ணாளனுக்கு. (ஸ்ரீராம)

கோவை மணிவாயனுக்கு மாயனுக்கு மங்களம்
கோதண்டக்கையனுக்கு மெய்யனுக்கு மங்களம்
தாவுகுண்ட சீலனுக்குச் சத்திய விலாசனுக்குத்
தேவர் அநுகூலனுக்குத் தசரதன் பாலனுக்கு (ஸ்ரீராம)

பகிரண்ட நாதனுக்கு வேதனுக்கு மங்களம்
பரதனாம் அன்பனுக்கு முன்பனுக்கு மங்களம்
சகல உல்லாசனுக்குத் தருமந்தகாசனுக்கு
அகிலவிலாசனுக்கு அயோத்தியா வாசனுக்கு (ஸ்ரீராம)

ஸ்ரீதேவி பூதேவி நீளாதேவி சமேத
ஸ்ரீமந்நாராயணப் பரப்பிரம்மணே நம.

சுபம்

ஸ்ரீராமஜெயம்

# வழிபாட்டுமுறை

இங்கு ஸ்ரீ வேங்கடேச சுப்ரபாத வழிபாடு ஸ்ரீ துளசி வழிபாடு, பசு வணக்கம், நவக்கிரக வழிபாடுகள் என்பனவற்றைத் தந்துள்ளோம்.

நவக்கிரகங்கள் இந்திராதி தேவர்களையும் ஆட்டி வைக்கும் சக்தி வாய்ந்தவை. ஆனால் திருமலையில் கோவில் கொண்டிருக்கும் எம்பெருமானைச் சரணமடைந்தவர்களுக்கு நவக்கிரகங்கள் யாதொரு கெடுதியும் செய்யாது. எனவே ஸ்ரீ வேங்கடேசரை நினைத்து இச் சுப்ரபாதத்தைச் சொல்லி வணங்கவும். இதேபோல் துளசி பசு அதற்குரிய சுலோகங்களைக் காலையில் சொல்லி வணங்கி வரவும். நவக்கிரகங்களை வணங்கும்போது நாம் இங்கு குறிப்பிட்டுள்ளதைச் சொல்லி வணங்கினால் காலக்கிரக தோஷங்கள், அமிருத்துக்கள் நீங்கி நல்வாழ்வு பெறுவீர்கள்.

## ஸ்ரீ வேங்கடேஸ்வரர் ஸுப்ரபாத வழிபாடு

ஸூர்யேந்து பௌம புத வாக்பதி காவ்ய ஸௌரி
ஸ்வர்பாநு கேது திவிஷத்பரிஷத்ப்ரதாநா :
த்வத் தாஸ தாஸ சரமாவதி தாஸ தாஸ :
ஸ்ரீ வேங்கடாசலபதே தவ ஸுப்ரபாதம்.

## ஸ்ரீ துளசி வழிபாடு

யந்மூலே ஸர்வதீர்த்தாநி யந்மத்யே ஸர்வதேவதா :
யதக்ரே ஸர்வ வேதாஸ்ச துளஸீம் தாம் நமாம்யஹம்
நமஸ்துளசி கல்யாணி நமோ விஷ்ணுப்ரியே ஸுபே
நாமே மோக்ஷப்ரதே தேவி நமஸ் ஸம்பத்ப்ரதாயிகே.

## பசு வணக்கம்

ஸர்வகாமதுகே தேவி ஸர்வ தீர்த்தாபிஷேசிநீ
பாவநீ ஸுரபிஸ்ரேஷ்டே தேவி துப்யம் நமோஸ்து தே.

ஸ்ரீ

ஸ்ரீராமஜெயம்

# நவக்கிரக வழிபாடு

## சூரிய பகவான்

ஜபாகுஸும ஸங்காஸம்
காஸ்யபேயம் மஹாத்யுதிம்
தமோரியம் ஸர்வ பாபக்நம்
ப்ரணதோஸ்மி திவாகரம்

## சந்திர பகவான்

ததிஸங்க துஷாராபம்
க்ஷீரோதார்ணவ ஸம்பவம்
நமாமி ஸஸிநம் ஸோமம்
ஸம்போர் மகுட பூஷணம்.

## செவ்வாய் பகவான்

தரணீ கர்ப்ப ஸம்பூதம்
வித்யுத்காந்தி ஸமப்ரபம்
குமாரம் ஸக்தி ஹஸ்தம் ச
மங்களம் ப்ரணமாம்யஹம்.

## புதன் பகவான்

ப்ரியங்கு கலிகா ஸ்யாமம்
ரூபேணாப்ரதிமம் புதம்
ஸௌம்யம் ஸௌம்ய குணோபேதம்
தம் புதம் ப்ரணமாம்யஹம்.

## குரு பகவான்

தேவாநாஞ்ச ரிஷீணாஞ்ச
குரும் காஞ்சந ஸந்நிபம்
பக்தி பூதம் த்ரிலோகேஸம்
தம் நமாமி ப்ருஹஸ்பதிம்.

## சுக்ர பகவான்

ஹிமகுந்த ம்ருணாலாபம்
தைத்யாநாம் பரமம் குரும்
ஸர்வஸாஸ்த்ர ப்ரவக்தாரம்
பார்கவம் ப்ரணமாம்யஹம்.

## சனி பகவான்

நீலாஞ்ஜந ஸமாபாஸம்
ரவிபுத்திரம் யமாக்ரஜம்
ச்சாயா மார்த்தாண்ட ஸம்பூதம்
தம் நமாமி ஸநைஸ்சரம்.

## ராகு பகவான்

அர்தகாயம் மஹாவீர்யம்
சந்த்ராதித்ய விமர்தநம்
ஸிம்ஹிகா கர்ப்ப ஸம்பூதம்
தம் ராஹும் ப்ரணமாம்யஹம்

## கேது பகவான்

பலாஸ புஷ்ப ஸங்காஸம்
தாரகா க்ரஸ மஸ்தகம்
ரௌத்ரம் ரௌத்ராத்மகம் கோரம்
தம் கேதும் ப்ரணமாம்யஹம்.

ஸ்ரீராமஜெயம்

# ஸ்ரீ ஆழ்வார்கள்
# ஜெயந்தித் திருநாட்கள்

1. ஸ்ரீ மதுரகவியாழ்வார் சித்திரை மாதத்து சித்திரை நட்சத்திரம்.

2. ஸ்ரீ நம்மாழ்வார் வைகாசி மாதத்து விசாக நட்சத்திரம்.

3. ஸ்ரீ பெரியாழ்வார் ஆனி மாதத்து சுவாதி நட்சத்திரம்.

4. ஸ்ரீ ஆண்டாள் ஆடி மாதத்து பூர நட்சத்திரம்.

5. ஸ்ரீ பொய்கையாழ்வார் ஐப்பசி மாதத்து திருவோணநட்சத்திரம்.

6. ஸ்ரீ பூதத்தாழ்வார் ஐப்பசி மாதத்து அவிட்ட நட்சத்திரம்.

7. ஸ்ரீ பேயாழ்வார் ஐப்பசி மாதத்து சதய நட்சத்திரம்.

8. ஸ்ரீ திருமங்கையாழ்வார் கார்த்திகை மாதத்து கார்த்திகை நட்சத்திரம்.

9. ஸ்ரீ திருப்பாணாழ்வார் கார்த்திகை மாதத்து ரோகிணி நட்சத்திரம்.

10. ஸ்ரீ தொண்டரடிப் பொடியாழ்வார் மார்கழி மாதத்துக் கேட்டை நட்சத்திரம்.

11. ஸ்ரீ திருமழிசையாழ்வார் தை மாதத்து மக நட்சத்திரம்.

12. ஸ்ரீ குலசேகராழ்வார் மாசி மாதத்துப் புனர்பூச நட்சத்திரம்.

அச்சுப்பதிவு:

காரைநகர் பாலா அச்சகம்